Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JUNE 11, 2021

வெள்ளிக்கிழமை ஜூன் 11, 2021 | ஒளி: 07 கதிர்: 19 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

## ஜூலை 2இல் மடு உற்சவம்



மன்னார், மடு தேவாலயத்தின் வருடாந்த ஆடிமாத உற்சவம், மட்டுப்படுத்தப்பட்ட தரப்பினருடன் ஜூலை மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ளது.

“பயணக் கட்டுப்பாட்டை கருத்திற்கொண்டு பெருமளவிலான பொதுமக்களின் பங்குபற்றலின்றி, இம்முறை உற்சவத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது” என, மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்ணான்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.


## ‘பின்பற்ற வேண்டியவை பின்னர் அறிவிக்கப்படும்’

நாடளாவிய ரீதியில், மே 25ஆம் திகதிக்குப் பின்னர் தொடர்ச்சியாக, அமல்படுத்தப்பட்டிருந்த பயணக் கட்டுப்பாடுகள், ஜூன் மாதம் 14ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 21 ஆம் திகதியன்று அமல்படுத்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள், அத்தியாவசிய பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மே 25ஆம் திகதியன்று தளர்த்தப்பட்டது. அதன்பின்னர், மே 31ஆம் திகதியும் ஜூன் 4 ஆம் திகதியும் தளர்த்தப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

தொடர்ச்சி P2

# ‘ஒன்பது இடங்களில் அல்பா கொரோனா’



**விழிப்பாக இருக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுரை**

**குளியாப்பிட்டி, வாரியபொல, மாத்தறை, ஹபராதுவ, திஸ்ஸமாஹாராம, கராப்பிட்டிய, ராகம இடங்களில் அடையாளம்**

**கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அல்பா தொற்று**

**3 வகை தடுப்பூசிகளும் அல்பா தொற்றிலிருந்து பாதுகாக்கும்**

இந்தியாவில் புதிய திரிபாக மாறிவரும் பி.1.617.2 (டெல்டா) எனும் ‘அல்பா கொரோனா’ தொற்றுக்குள்ளான ஒருவர், தனிமைப்படுத்தல் மத்திய நிலையமொன்றிலிருந்து அடையாளம் காணப்பட்டுள்ளார் என தெரிவித்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, நோய் எதிர்ப்பு, உயிரியல் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் சந்திம ஜீவந்தர, இந்தியாவில் அடையாளம் காணப்பட்ட குறித்த கொரோனா தொற்றுக்குள்ளாகி, இலங்கையில் இனங்காணப்பட்ட இரண்டாவது நபர் என்றார்.

தொடர்ச்சி P2

சுகாதார பரிசோதகரைத் தாக்கிய

## இளைஞன் கைது



வவுனியா, சாந்தசோலை பிரதேசத்தில், பொதுச் சுகாதார பரிசோதகர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில், விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமாகிய அஜித் ரோஹண தெரிவித்தார்.

25 வயதான இளைஞன் ஒருவர், முகக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த போது, அவ்விளைஞனை வழிமறித்த பொதுச் சுகாதார பரிசோதகர் விசாரணை நடத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘நடத்தையே எதிர்காலத்தை தீர்மானிக்கும்’



ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் எதிர்காலமானது, அக்கட்சியின் தலைவர் சஜித் பிரேதமாஸவின் நடத்தை மற்றும் வேறு சில காரணங்களுக்கு அமையவே தீர்மானிக்கப்படுமென, அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## ‘தம்பி என்னா? இந்தப் பக்கம்...’

நாட்டில் பயணக் கட்டுப்பாடு அமலில் உள்ள நிலையில், கல்முனை, கடற்கரைப்பள்ளி பகுதியில் நடமாடிய சிறுவனை, விசேட அதிரடிப் படையினர் அழைத்து விசாரிப்பதைப் படத்தில் காணலாம்.

அம்பாறை மாவட்டத்தில் அண்மைக்காலமாக கொரோனா தொற்றாளர்கள் அதிகரித்துவரும் நிலையில், பயணக் கட்டுப்பாட்டை இறுக்கமாக கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு வருவதுடன், விசேட அதிரடிப் படையினரின் ரோந்து நடவடிக்கையும் இடம்பெற்று வருகின்றது.

(படப்பிடிப்பு – பாறுக் ஷிஹான்)

இந்தியாவில் இருந்து வந்த

## இளைஞன் சிக்கினார்

■ செ.கீதாஞ்சன்

இந்தியாவில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு வந்த இளைஞன் ஒருவர், நேற்று (10), முள்ளியவளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

முள்ளியவளை பகுதியைச் சேர்ந்த இளைஞனே, இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, இந்தியாவில் இருந்து கடல் வழியாக இலங்கைக்கு பலர் வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

தொடர்ச்சி P2

## இளம் கொரோனா மரணம் இலங்கையில் பதிவு

இலங்கையில் மிகவும் குறைந்த வயதுடைய சிசுவொன்று கொரோனாவுக்கு மரணமான சம்பவம் மலையகத்தில் பதிவாகியுள்ளது. பிறந்து எட்டு நாள்களேயான சிசுவொன்றே மரணித்துள்ளது.

தொடர்ச்சி P2

## மகனின் சடலம் மிதந்தது: அருகே தூங்கிய தந்தை கைது

■ எச்.எம்.எம்.பர்ஸான், ஆர். ஜெயஸ்ரீராம், எம்.எம்.அஹமட் அனாம், கனகராசா சரவணன்



வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை ஐஸ்மோல் வீதியிலுள்ள கிணற்றிலிருந்து நான்கு வயதுச் சிறுவன் ஒருவனின் சடலம், நேற்று (10) மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## உள்ளே

### ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’இன் பொருள்கள் மன்னாரிலும் கரையொதுங்கின



முழுச் செய்தி P4


## பிள்ளையை துணியால் சுற்றிக்கொண்டு ஹெரோய்ன் விற்ற ஜோடி சிக்கியது

■ ஷேன் செனவிரத்ன

சுகவீனம் அடைந்திருக்கும் தங்களுடைய ஐந்து வயதான பிள்ளையை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதாகக் கூறி, அதிசொகுசு வாகனத்தில் போதைப்பொருள் விற்பனை செய்துகொண்டிருந்த ஜோடியை கண்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## கப்பலின் எண்ணெய் கசிவு 150 கிலோ மீற்றருக்கு பரவும்



இலங்கைக் கடற்பரப்புக்குள் தீப்பிடித்து எரிந்த எம்.வி எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலிருந்து எண்ணெய் கசிவு ஏற்படுவது உறுதியாகியுள்ளது.

செய்மதி தொழில்நுட்பத்தின் ஊடாக எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து, அக்கப்பலில் எண்ணெய் கசிவு ஏற்பட்டுள்ளமைக்கான ‘கறை’ தென்படுகின்றது. கப்பலின் வடகிழக்கு திசையிலேயே எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ‘ரணிலின் நோய் வந்துள்ளதால் மாளிகையை முடக்குவோம்’

“நாட்டின் வளங்களை விற்காவிடின், ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிம்மதியே இல்லை. அவருக்கு ஏற்பட்டிருந்த அந்த நோய், இந்த அரசாங்கத்துக்கும் தொற்றிக்கொண்டுள்ளது” எனத் தெரிவித்துள்ள தேசிய பிக்குகள் முன்னணி, “இந்நிலை நீடிக்குமாயின் ஜனாதிபதி மாளிகையை முடக்குவோம்” எனச் சூளுரைத்துள்ளது.

கொழும்பில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும் போதே, தேசிய பிக்குகள் முன்னணியின் முக்கியஸ்தரான வகாமுல்ல உதித்த தேரர், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

போதைப்பொருள் விற்பனை:

## பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையமொன்றில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் இணைந்து, கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக, பொலிஸ் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் மீட்கப்படும் போதைப்பொருள்களை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முன்னர், அவற்றில் இருந்து பகுதியளவிலான போதைப்பொருளை திருடி, அவற்றை வெளியில் விற்பனை செய்து வருவதாகவும் இது நீண்ட காலமாக இடம்பெற்றுவருவதாகவும், குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ‘நான்தான் சூழ்ச்சிக்காரன்’



ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரான சஜித் பிரேமதாஸவை, எதிர்க்கட்சித் தலைவர் பதவியிலிருந்து நீக்கிவிட்டு, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அப்பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன எனவும், அதில், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பலரும் அங்கம் வகிக்கவுள்ளனர் எனவும் தகவல்கள் கசிந்திருந்தன. இது அரசியல் அரங்கில் பெரிதும் பேசப்படும் கருப்பொருளாக மாறிவிட்டது.

தொடர்ச்சி P2

## மற்றுமோர் எம்.பிக்கு கொரோனா தொற்றியது



வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் எம்.பி, கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

அவருக்கு மேற்கொண்ட அன்டிஜன் பரிசோதனையிலேயே, கொரோனா வைரஸ் தொற்றியிருப்பது உறுதியானது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்ட இன்னும் சில எம்.பிக்கள், கடந்த இரண்டொரு வாரங்களில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘ஒன்பது இடங்களில் அல்பா கொரோனா’

கொழும்பில் நேற்று (10) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

“இலங்கையில் கொரோனா தொற்று பரவல் தொடர்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் மரபணு வரிசைமுறை தொடர்பான புதிய ஆய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அத்துடன், மிகவும் வேகமாகப் பரவி வரும் பிரித்தானியாவின் கென்ட் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட பி.1.1.7 அல்பா தொற்று கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, குளியாப்பிட்டி, வாரியபொல, மாத்தறை, ஹபராதுவ, திஸ்ஸமாஹாராம, கராப்பிட்டிய, ராகம ஆகிய இடங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ளது என்றார்.

அதேபோல பி.1.411 கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவர் திஸ்ஸமஹாராம பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் சிலருக்கு அல்பா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவரும் கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை

**“ கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கடமையாற்றும் சிலருக்கு அல்பா தொற்று ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் இவர்கள் அனைவரும் கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸை செலுத்திக்கொண்டவர்கள் என்பதுடன், இவர்கள் அனைவரும் தற்போது சுகமடைந்துள்ளனர்**

செலுத்திக்கொண்டவர்கள் என்பதுடன், இவர்கள் அனைவரும் தற்போது சுகமடைந்துள்ளனர் என்றார்.

பிரித்தானியாவில் அடையாளம் காணப்பட்ட ஆல்ஃபா தொற்று நாட்டின் பல்வேறு பிரதேசங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதால், பொதுமக்கள் இந்த வைரஸ் தொற்றிலிருந்து தம்மை பாதுகாத்துக்கொள்வது அவசியம் என்பதுடன், சுகாதாரத் தரப்பினரின் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக இலங்கையில் தற்போது செலுத்தப்படும் 3 வகையான தடுப்பூசிகளும் அல்பா தொற்றிலிருந்து பாதுகாக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இளைஞன் கைது

இதன்போதே. அவ்விளைஞன் பரிசோதகரைத் தாக்கியுள்ளார்.

குறித்த சந்தேகநபரை, வவுனியா பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# இளைஞன் சிக்கினார்

இந்நிலையில், மாவட்டங்களில் தேடுதல் மேற்கொண்டுவரும் புலனாய்வுப் பிரிவினர், குறித்த இளைஞனை கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இளைஞன், முள்ளியவளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இவர் எப்போது, எவ்வாறு வந்தார் என்பது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ‘நான்தான் சூழ்ச்சிக்காரன்’

இந்நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தர்களில் ஒருவரான ஹரின் பெர்ணான்டோ எம்.பி, திடீரென ஊடகங்களிடம் சிக்கிக்கொண்டார். அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு கீழ் கண்டவாறு பதிலளித்தார்.

கேள்வி: எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பங்கேற்காத கூட்டத்தில், சஜித் பிரேமதாஸவே எதிர்க்கட்சித் தலைவராகத் தொடர்ந்தும் இருப்பார் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது ஏன்?

பதில்: “அத்தீர்மானத்தை நிறைவேற்றியவர்களிடம்தான் கேட்கவேண்டும். உண்மையிலேயே அது முட்டாள்தனமான செயற்பாடாகும்” என்றார்.

“எனது தலைவர் சஜித் பிரேமதாஸ, அவர்தான் எதிர்க்கட்சித் தலைவர் என்பதை மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்துவதற்கான விசேடமான காரணம் என்ன? என்பதை அதனை செய்தவர்களிடம்தான் கேட்கவேண்டும். நான் இருந்திருந்தால் கேட்டிருப்பேன். நான், இரண்டு மாதங்கள் விடுமுறையில் இருக்கின்றேன்” என்றார்.

“தேவையில்லாத பயத்தை தோற்றுவிப்பதற்கு யாருக்கு பைத்தியம் பிடித்திருந்தது என்பதை பார்க்கவேண்டும்” என்றார்.

கேள்வி: ரணிலுக்கு இன்னும் பயமிருக்கிறதா? ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பலர் விலகிச்சென்றுவிடுவர் என நீங்கள் நினைக்கின்றீர்களா?

பதில்: அரசியல் நீண்ட அனுபவம் கொண்டவர், மூளைசாலியான ரணில் விக்கிரமசிங்கவை, எவ்விடத்தில் கண்டாலும் அவருடன் உரையாடுவேன். ஐ.ம.சக்தியை உருவாக்கியுள்ளோம். ஆனால், அங்குமிங்கும் பாயும் பைத்தியங்கள் ஐ.ம.சக்திக்குள்ளும் இருக்கக்கூடும் என்றார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஏனைய எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும். அதனூடாகவே ஆட்சியைக் கவிழ்க்கமுடியும். அவ்வாறில்லாது, அரசாங்கத்தைக் கவிழ்க்க முடியாது.

ஐக்கிய தேசிய கட்சி தேவையில்லையென ஐக்கிய மக்கள் சக்தி நினைக்குமாயின் அது முட்டாள்தனமானது. அதேபோல, ஐக்கிய மக்கள் சக்தி தேவையில்லையென ஐக்கிய தேசிய கட்சியும் நினைத்தால் அதுவும் முட்டாள் தனமானது.

**“ ரணிலை நான் மதிப்பவன்; அரசியலுக்கு அழைத்தார், எம். பியாக்கினார். மாகாண சபை முதலமைச்சராக்கினார். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக்கினார். அவருடைய காலத்தில்தான் இவையெல்லாம் நடந்தன. அவருடன் எந்தவொரு பிரச்சினையும் எனக்கில்லை. அங்குமிங்கும் பாயும் பைத்தியங்கள் ஐ.ம.சக்திக்குள்ளும் இருக்கக்கூடும்**

இந்த அரசாங்கம் தோல்வியடைந்துவிட்டது. அதனை உறுதிசெய்யவேண்டுமாயின் எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரளவேண்டும். மக்களுக்கு ஏதாவது செய்வேண்டுமாயின் புது நோக்கம் இருக்கவேண்டும் என்றார்.

கேள்வி: எதிர்க்கட்சி ஒன்றுமே செய்யவில்லை என மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

பதில்: “ஒன்றரை மாதங்கள் நான்

**“ ஐ.தே.க, ஐக்கிய மக்கள் சக்தி, ஏனைய எதிர்க்கட்சிகள் ஒன்றிணைய வேண்டும். அதனூடாகவே ஆட்சியைக் கவிழ்க்கமுடியும். ஐக்கிய தேசிய கட்சி தேவையில்லையென ஐக்கிய மக்கள் சக்தி நினைக்குமாயின் அது முட்டாள்தனமானது. அதேபோல, ஐக்கிய மக்கள் சக்தி தேவையில்லையென ஐக்கிய தேசிய கட்சியும் நினைத்தால் அதுவும் முட்டாள் தனமானது**

இருக்கவில்லைதானே அதுதான்” என்றார்.

கேள்வி: நீங்கள் உட்பட, 15 பேர் ரணிலுடன் செல்லவிருப்பதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளாரே?

பதில்: இல்லை, அது முற்றிலும் பொய்யானது. ரணிலை நான் மதிப்பவன்; அரசியலுக்கு அழைத்தார், எம்.பியாக்கினார். மாகாண சபை முதலமைச்சராக்கினார். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக்கினார். அவருடைய காலத்தில்தான் இவையெல்லாம் நடந்தன. அவருடன் எந்தவொரு பிரச்சினையும் எனக்கில்லை என்றார்.

அவரைக் காணும் போதெல்லாம் கதைப்பேன்; அவரை மதிப்பேன். அப்படியாக இருக்கும்போது, அரசியல் என்றவகையில், சஜித் பிரேமதாஸவுக்கு நான், எதிரானவன் அல்லன் என்றார்.

கேள்வி: உங்கள் கட்சிக்குள் சூழ்ச்சிகள் இடம்பெறுகின்றனவா?

பதில்: “சூழ்ச்சிகளை செய்வதாக இருந்தால், அதனை நான்தான் செய்வேன்; அவ்வாறான சூழ்ச்சிகள் எவையும் இடம்பெறாது” என்றார்.

# ‘ரணிலின் நோய் வந்துள்ளதால் மாளிகையை முடக்குவோம்’

“கொழும்பு நகரின் தலையெனக் கூறப்படும் பகுதிகளிலுள்ள முக்கிய நிறுவனங்களை விற்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. தேசிய வளங்களை விற்பதற்கான புதிய வார்த்தைதான் முதலீடாகும்” எனத் தெரிவித்த அவர், “பயணக் கட்டுப்பாடுகளை விதித்து, மக்களை வீடுகளுக்குள் முடக்கிவைத்துவிட்டு, தேசிய வளங்களை விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது” என்றார்.

ஜனாதிபதி உள்ளிட்ட இந்த அரசாங்கத்தில் இருப்போர், அன்று கூறியதற்கு எதிர்மறையாக, நாட்டை அழிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர் எனக் குற்றஞ்சாட்டிய அவர், “சந்திரிகா அம்மையார், ரணில், மஹிந்தவின் காலங்களில் நாட்டிலுள்ள வளங்கள் விற்கப்பட்டன. தற்போது கோட்டாபயவும் மிகுதி வளங்களை விற்று, நிறைவு செய்வதற்காகத் தயாராகிவருகின்றார்” என்றார்.

வெள்ளை ஆடையை அணிந்து தேசபக்தியாளனாக தன்னை இனம் காட்டிக்கொண்டுள்ள உதய கம்மன்பிலவின் தேசபக்தி இப்போது மக்களுக்கு நன்றாக தெரிந்துள்ளதாகத் தெரிவித்த அவர், “எரிபொருள் கூட்டுத்தாபனத்தை விற்பதற்காக, சட்டத்தை திருத்த முயல்கிறார். அதற்கு ஆதரவளிப்பவர்கள் அனைவரும் தேசத்துரோகிகள்” என்றார்.

# ‘நடத்தையே எதிர்காலத்தை தீர்மானிக்கும்’

அப்போதைய சந்தர்ப்பத்தில் இருந்த சிறந்த ஒரேயொரு மாற்றுவழி சஜித் என்றும் அதனாலேயே நாம் அதற்கேற்றவாறு செயற்பட்டோம் எனத் தெரிவித்த அவர், எனினும், ஐக்கிய மக்கள் சக்தியின் எதிர்கால பயணம் அவரது செயற்பாடு மற்றும் ஏனைய காரணங்களுக்கு அமைய தீர்மானிக்கப்படும் என்றார்.

# பொலிஸாருக்கு எதிராக முறைப்பாடு

இச்சம்பவத்தில், பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட மூன்று பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபட்டதாக, பொலிஸ் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

முறைப்பாட்டின் பிரகாரம், மேற்படி நான்கு பேருக்கும் எதிராக பொலிஸாரின் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களின் வாக்குமூலங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

# இளம் கொரோனா மரணம் இலங்கையில் பதிவு

கம்பளை, புஸ்ஸலாவையைச் சேர்ந்த தம்பதியின் சிசுவொன்றே இவ்வாறு மரணித்துள்ளது.

மே மாதம் 25ஆம் திகதியன்று பிறந்து சிசுவுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. எனினும், காய்ச்சல் குணமடைந்ததன் பின்னர், குழந்தையை வைத்தியசாலையிலிருந்து வீட்டுக்கு பெற்றோர் கொண்டு சென்றுள்ளனர். வீட்டுக்குச் சென்றதன் பின்னர் அச்சிசு வாந்தி எடுத்துள்ளது.

அச்சிசு, மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் பி.சி.ஆர் பரிசோதனை செய்யப்பட்டதில், கொரோனா வைரஸ் தொற்றியுள்ளமை உறுதியானது.

கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அந்தச் சிசு, மே மாதம் 27ஆம் திகதியன்று மரணித்துள்ளது.

பெற்றோரிடமிருந்தே கொரோனா வைரஸ் சிசுவுக்கு தொற்றியிருக்கலாம் என சந்தேகிக்கும் வைத்தியர்கள், பெற்றோருக்கும் பி.சி. ஆர் பரிசோதனைகளை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

# ‘பின்பற்ற வேண்டியவை பின்னர் அறிவிக்கப்படும்’

எனினும், பொதுமக்கள் நடந்துகொண்ட விதத்தை அடுத்து, கட்டுப்பாடுகள் தளர்த்தப்படாமல், நீடிக்கப்பட்டது.

இந்நிலையில், 14ஆம் திகதி அதிகாலை 4 மணிக்கு கட்டுப்பாடுகளை நீக்கிய பின்னர் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும் என கொவிட்-19 ஐ கட்டுப்படுத்தும் ஜனாதிபதி செயலணியின் பிரதானியான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிவித்தார்.

# பிள்ளையை துணியால் சுற்றிக்கொண்டு ஹெரோய்ன் விற்ற ஜோடி சிக்கியது

அந்தக் காரிலிருந்து 22 இலட்சம் ரூபாய் பணம், 60 கிராம் ஹெரோய்ன் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சுகவீனம் அடைந்துள்ளதாகக் கூறப்படும் ஐந்து வயதான பிள்ளை, துணியொன்றால் சுற்றப்பட்டு, வாகனத்தின் ஆசனத்தில் கிடத்தப்பட்டுள்ளது.

சந்தேகத்துக்கு இடமான அந்த வாகனம் பொலிஸாரின் சோதனையிலிருந்து நேற்று முன்தினம் (9) இரவு தப்பிச் சென்றுள்ளது.

எனினும், வாவியோரத்தில் வைத்து வாகனத்தை மடக்கிப்பிடித்த பொலிஸார் வாகனத்தை சோதனைக்கு உட்படுத்துவதற்கு முயன்றுள்ளனர். எனினும், அந்த ஜோடி அதற்கு கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளது.

சந்தேகம் கொண்ட பொலிஸார், வாகனத்திலிருந்து 22 இலட்சம் ரூபாயை கைப்பற்றினர்.

அதனையடுத்து மேற்கொண்ட தேடுதலில் பெண்ணிடமிருந்து 05 கிராம் ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டுள்ளது. வாகனத்திலிருந்து 55 கிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட ஜோடி, கண்டி பிரதேசத்திலுள்ள பிரபல்யமான இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்றுள்ளனர். நகரத்துக்கு அண்மையிலிருக்கும் ஹோட்டலொன்றில் தங்கியிருந்தே ஹெரோய்ன் போதைப்பொருளை மிகவும் சூட்சுமமான முறையில் விற்பனை செய்துவந்துள்ளனர் என விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# கப்பலின் எண்ணெய் கசிவு 150 கிலோ மீற்றருக்கு பரவும்

அந்தக் கறை, பல மீற்றர் தூரத்துக்கு பரவியுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. அந்த எண்ணெய்க் கசிவானது, சுமார் 150 கிலோ மீற்றர் தூரத்துக்குப் பரவலடையும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தீப்பற்றி எரிந்த கப்பல், கடந்த 2ஆம் திகதியன்று ஆழ்கடலுக்கு இழுத்துச் செய்யப்பட்டது. இதன்போது, கப்பலுக்குள் நீர் புகுந்துகொண்டமையால், அக்கப்பல் மூழ்கத் தொடங்கியது. அத்துடன், கப்பலின் பின்பக்கம் சுமார் 22 மீற்றர் ஆழத்துக்குள் கடலுக்குள் மூழ்கிவிட்டது.

இதேவேளை, இது கப்பலுக்கு பயன்படுத்தப்படும் எண்ணெயா? அல்லது தீப்பற்றியதன் பின்னர் ஏற்பட்ட கறையா? என்பது தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என நாரா நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள நாரா நிறுவனத்தின் தலைமை விஞ்ஞானி கணபதிப்பிள்ளை அருளானந்தன், அக்கப்பலில் இருந்து வட கிழக்கு நோக்கி எண்ணெய் படலமொன்று பரந்து காணப்படுகிறது. ஜூன் மாதம் 4ஆம் திகதி அண்ணளவாக 3.5 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் காணப்பட்டது. தற்போது 0.35 கிலோ மீற்றர் சதுரப் பரப்பளவிலேயே காணப்படுகின்றது. அத்துடன், கடல் நீர் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றார்.

# மகனின் சடலம் மிதந்தது: அருகே தூங்கிய தந்தை கைது

பெற்றோருடன் தூங்கிக்கொண்டிருந்த நிலையிலேயே இரவு 11 மணியளவில் சிறுவன் காணாமல் போயுள்ளதாகவும், பின்னர் நீண்ட நேரத்துக்குப் பிறகு சிறுவனைத் தேடிப் பார்த்த போது, உயிரிழந்த நிலையில் கிணற்றுக்குள் கிடந்தான் என பொலிஸாரிடம் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

நான்கு பிள்ளைகளைக் கொண்ட தம்பதிகளின் மூன்றாவது பிள்ளையான நளீம் ஹாபில் எனும் சிறுவனே கிணற்றிலிருந்து இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக்கட்ட விசாரணையை அடுத்து, சந்தேகத்தின் பேரில் அச்சிறுவனின் தந்தை கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். மட்டக்களப்பு தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மரணங்கள் அதிகரிப்பதற்கு

# ‘தாமதமே காரணம்’

அவசர மருத்துவ உதவிகளை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களாலேயே கொரோனா வைரஸ் தொற்றால் அதிகமானோர் உயிரிழக்கக் காரணமென சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர் ரஞ்சித் படுவந்துடாவ தெரிவித்துள்ளார்.




நாட்டில் அண்மையில் பதிவான கொரோனா வைரஸ் மரணங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையிலேயே கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாறு தெரிவிக்கும் அவர், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகும் 80 சதவீதமானோர் கடுமையான நோய் நிலைமைகளுக்கு முகங்கொடுப்பதில்லை எனவும், சில தொற்றாளர்களே கொரானா வைரஸால் கடுமையாகப் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றாளர்களை ஆரம்பத்திலேயே இனங்காண்டு சிகிச்சையளிக்க வேண்டுமெனவும், இல்லை என்றால் குணப்படுத்துவதற்கான வாய்ப்புகள் குறைவாகுமெனவும் தெரிவித்த சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தின் பணிப்பாளர், இதனாலேயே கொரோனா வைரஸ் தொற்றுக்கான நோய் அறிகுறிகளைக் கொண்டவர்கள் உடனடியாக மருத்துவ உதவிகளைப் பெற வேண்டுமென அறிவுறுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

## ‘அநியாயங்கள் அதிகரிக்கக் கூடாது’



பாணந்துறையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதன் பின்னர் நபரொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில், நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம், இதுபோன்ற அநியாயங்கள் அதிகரிக்கக்கூடாதெனவும் தெரிவித்துள்ளார்.

கொரோனா தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கைது செய்யப்பட்ட ஒருவர் உயிரிழந்திருந்த நிலையில், குறித்த நபரின் பாணந்துறை வீட்டுக்கு தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், இரா. சாணக்கியன் ஆகியோர் நேற்று முன்தினம் சென்றிருந்தனர்.

உயிரிழந்தவரின் மனைவி மற்றும் உறவினர்களுடன் பிரதேச மக்களையும் சந்தித்து இருவரும் ஆறுதல் தெரிவித்து, ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், இச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களில் ஒரு விதமாகவும், பொலிஸார் ஒரு விதமாகவும், உறவினர்கள் ஒரு விதமாகவும் தெரிவிப்பதாகவும் சாணக்கியன் தெரிவித்திருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் பாரபட்சமற்ற, நியாயமான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இங்கு தமிழரா, முஸ்லிமா, சிங்களவரா என்பதல்ல விடயம். இதுபோன்ற அநியாயங்கள் நாட்டில் அதிகரிக்க கூடாதென்பதற்காகவே தாம் இங்கு வருகை தந்ததாகவும் கூறினார்.

அளுத்கம கரையிலிருந்து

## மர்மப் பொருள் மீட்பு

■ துஷிதகுமார சில்வா



அளுத்கம- மொரகல்ல கடற்பரப்பில் 250 கிலோ கிராமுக்கு அதிக நிறையுடைய, இரும்பிலான பொருளொன்று, நேற்றுக் (10) காலை மீட்கப்பட்டதென, மொரகல்ல சுற்றுலாப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பிரதேசத்தில் மிதந்துகொண்டிருந்த இந்த இரும்புப் பொருளை, அவதானித்த மீனவர்கள், இதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்த பின்னர், அதனை கரைக்குக் கொண்டு வந்துள்ளனர்.

இந்தப் பொருளானது அண்மையில் தீப்பற்றி எரிந்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலிலுள்ள பொருளென சந்தேகித்தில் ஆராய்ந்த போது, அப்பொருள் தொழில்நுட்ப பயன்பாட்டுக்கு உரிய பொருளென அடையாளம் கண்டுள்ளனர்.

இதனையடுத்து இந்தப் பொருளை நாரா நிறுவனத்திடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மொரகல்ல சுற்றுலாப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிறந்தநாள் கொண்டாடியவர்கள்

## வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டனர்




கொள்ளுபிட்டியிலுள்ள சொகுசு தொடர்மாடிக் குடியிருப்பில் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் ஈடுபட்ட 9 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகப் அப்பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

சுகாதார வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தலுக்கு அமையவே இவர்கள் அனைவரும் வீடுகளிலேயே 14 நாள்களுக்குத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மேலும் தெரிவித்தனர்.

சொகுசு குடியிருப்பில் பிறந்தநாள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டமைக்காக இரு வெளிநாட்டவர்கள், மூன்று பெண்கள் உள்ளிட்ட 9 பேரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்திருந்தனர்.

சந்தேகநபர்கள் கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டதன் பின்னர் பத்து இலட்சம் ரூபாய் சரீரப் பிணையில் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து அனைவரும் வீடுகளிலேயே தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பிறந்தநாள் கொண்டாட்டங்களில் வெளியாட்கள் எவரும் கலந்துகொள்ளவில்லை எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில்

## 10 சதவீதமானோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன

நாட்டு மக்களில், 10 சதவீதமானோருக்கு கொரோனா வைரஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சுத் தரவுகள் தெரிவிக்கின்றன.

இதுவரையில், 20 இலட்சத்து 25 ஆயிரத்து 725 பேர் முதல் டோஸையும், இரண்டாவது டோஸை 3 இலட்சத்து 56 ஆயிரத்து 956 பேரும் பெற்றுக்கொண்டுள்ள நிலையில், இம்மாதம் 8ஆம் திகதி வரையில் நாட்டின் மொத்த சனத்தொகையில் 30 வயதுக்கு மேற்பட்ட 17.62 சதவீதமானோருக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 497 பேருக்கு சினோஃபார்மையும் 9 இலட்சத்து 25 ஆயிரத்து 242 பேருக்கு அஸ்ட்ராசெனிக்காவையும் 64 ஆயிரத்து 986 பேருக்கு ஸ்புட்னிக் வீ தடுப்பூசியையும் கடந்த 8ஆம் திகதி வரையில் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சுத் தரவுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## ‘ஸ்டேஸ்புர கொல்லா’ சிக்கினார்



பயணக்கட்டுப்பாடுகள் அமுலில் உள்ள நிலையில், சட்டவிரோதப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த ‘ஸ்டேஸ்புர கொல்ல’ என்றழைக்கப்படும் நபர்,ஐந்து இலட்சம் ரூபாய்க்கும் அதிகமானப் போதைப்பொருள்களுடன் மேல் மாகாண, ஊழல் ஒழிப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ், ஸ்டேஸ்புர வீட்டில் வைத்தே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபரைக் கைது செய்வதற்கு சென்றிருந்த மேல்மாகாண, ஊழல் ஒழிப்புப் பொலிஸாருக்கு சந்தேகநபர் அழுத்தங்களை வழங்கியதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்படும்போது சந்தேகநபரிடமிருந்த 31 கிராம் போதைப்பொருளைப் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளதோடு, கைது செய்யப்பட்ட 32 வயதுடைய சந்தேகநபர் கிராண்ட்பாஸ், வெல்லம்பிட்டி, தெமட்டகொட, பொரளை ஆகிய பிரதேசங்களுக்குப் போதைப்பொருளை விநியோகித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, போதைப்பொருள் குற்றச்சாட்டுக்குள் தொடர்பில் சந்தேகநபரக்கு எதிராக உயர்நீதிமன்றில் 4 வழக்குகள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.




டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள்

## பெரண்டினா நிறுவனம் அன்பளிப்பு

பெரண்டினா நிறுவனத்தால், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு ஏழு இலட்ச ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. குறித்த உபகரணங்களை வைத்தியர்களான ஜே. அருட்செல்வன், ஜே.எம்.எஸ். ஜெயசேகர, கே.எஸ். லொக்குஹேவா கமகே ஆகியோரிடம், பெரண்டினா நிறுவனத்தின் பிரதி முகாமையாளர் பி.என். ரஹீமால் கையளித்தார். (டி. ஷங்கீதன்)





முதலியார்குளத்தில் 50 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள்

## ‘உதவிடும் கைகள் – ஊருக்கு உணவளிப்போம்’ செயற்றிட்டம்


‘உதவிடும் கைகள் - ஊருக்கு உணவளிப்போம்’ செயற்றிட்டத்தின்கீழ், முதலியார்குளம் கிராமத்தில், 50 குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இதற்கான நிதியை செட்டிகுளம் மண்ணின் புலம்பெயர் வாழ் உறவான பசுபதி ஐயாவின் புத்திரர்கள் சசி, காந்தன், கிருபா ஆகியோரால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வெங்கலசெட்டிகுளம் பிரதேச செயலாளர், பகுதி கிராமசேவையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் கலந்து கொண்டனர். (யது பாஸ்கரன்)

மன்னார் பல்கலைக்கழக மாணவர்கள் அபிவிருத்தி ஒன்றியம்

## ‘உறவுகளுக்குக் கரம் கொடுப்போம்’





மன்னார் பல்கலைக்கழக மாணவர்கள் அபிவிருத்தி ஒன்றியம் (#Ausdam) சார்பாக, மேற்கொள்ளப்பட்டு வருகிற உலர் உணவு பொதிகள் வழங்கும் சேவையில், மன்னாரில் தினம் உணவுக்கு அவதியுறும் மக்களை இனங்கண்டு, உலர் உணவு பொதிகள் ‘உறவுகளுக்குக் கரம் கொடுப்போம்’ திட்டத்தின் பெயரில் மக்களுக்கு வழங்கப்பட்டது. (யது பாஸ்கரன்)








## திருக்கோவில் தினக்கூலி குடும்பங்களுக்கு உதவி யாழ். இந்துக் கல்லூரி சமூகம் 108 பொதிகள் அன்பளிப்பு

திருக்கோவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் பி.மோகனகாந்தனின் கோரிக்கைக்கு அமைவாக, யாழ் இந்தக் கல்லூரி சமூகத்தினரால், பிரதேசத்தில் வறுமை நிலையில் வாழும் 108 தினக்கூலி குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் நேற்று முன்தினம் (09) வழங்கி வைக்கப்பட்டன.

உணவுப் பொதிகளை, திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், பொதுச் சுகாதார பரிசோதகர் எஸ். மகேஸ்வரன், பொதுச் சுகாதார மருத்துவ தாதி திருமதி யு. சக்கியா, குடும்ப நல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் நிவாரணங்களைக் கையளித்தனர். ( திருக்கோவில் எஸ். கார்த்திகேசு )



நானுஓயா– ரதல்ல தோட்டத்தொழிலாளர்களுக்கு

## தோட்ட அதிகாரியால் முகக்கவசங்கள்



ஹேலீஸ் பெருந்தோட்ட கம்பனியின்கீழ், இயங்கும் நானுஓயா- ரதல்ல தோட்டத்தொழிலாளர்களுக்கு, அத்தோட்ட அதிகாரி டில்ரோய் மனோகரால், கே.என் 95 ரக முகக்கவசங்கள், முகத்தை மறைக்கும் பிளாஸ்டிக் முகக்கவசங்கள் என்பன வழங்கிவைக்கப்பட்டன. (கேதீஸ்)

# தடுப்பூசி செலுத்தல் மும்முரம்

## கிழக்கில் 16,195 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளது

■ எம்.எஸ்.எம். ஹனீபா, வா.கிருஸ்ணா



கிழக்கு மாகாணத்தில் புதன்கிழமை (09) வரை 16,195 பேருக்கு கொவிட்-19 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டொக்டர் ஏ.ஆர்.எம். தௌபீக், நேற்று (10) தெரிவித்தார்.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவில் 7,583 பேருக்கும், திருகோணமலை மாவட்டத்தில் 3,560 பேருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் 5,052 பேருக்கும் கொவிட்-19 தொற்று தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் அரச வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கொவிட்-19 தடுப்பூசி எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படாதெனவும், மக்கள் பீதியடையாமல் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் கொவிட்-19 தொற்றின் 3ஆவது அலை மிக வேகமாகப் பரவி வருவதால் காய்ச்சல், தடுமல், இருமல் இருப்பவர்கள் எவ்வித பீதியும் அடையாமல் அருகில் உள்ள சுகாதார வைத்தியதிகாரி அலுவலகத்துக்குச் சென்று பி.சி.ஆர் அல்லது அன்டிஜன் பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுள்ளார்.


இதேவேளை, 'சைனோஃபாம்' தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று போரதீவுப்பற்று பிரதேசத்தில் 'சைனோஃபாம்' தடுப்பூசி செலுத்தப்பட்டது.

இதன்போது, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், பொலிஸார் ஆகியோருக்கு தடுப்பூசிகள் செலுத்தப்பட்டன.

லொறியில்

## உரம் கடத்தல்; இருவர் கைது

■ கனகராசா சரவணன்



அரசு மானியமாக வழங்கிய உரத்தை, அத்தியாவசிய சேவை என்ற பேரில், சட்டவிரோதமாக லொறியில் கடத்திச் சென்ற இருவர், மட்டக்களப்பு - தாழங்குடா பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குருநாகலில் இருந்து அம்பாறை நோக்கிப் பயணித்த இந்த லொறியில் இருந்து 53 உரப்பைகளை மீட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலுக்கமைய, தாழங்குடா பகுதியில் இராணுவத்தினர் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டபோது, இந்த லொறியை நிறுத்திச் சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, உரத்தை சட்டவிரோதமாக கடத்துவதைக் கண்டறிந்து, லொறியின் சாரதி, நடத்துநர் இருவரையும் இராணுவத்தினர் கைது செய்ததுடன், அதிலிருந்த உரத்தையும் மீட்டனர்.

கைதுசெய்தவர்களையும் மீட்கப்பட்ட உரம், லொறி என்பவற்றை காத்தான்குடி பொலிஸாரிடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ளனர்.

கொரோனாவுக்கு

## காரைதீவு பிரதேச சபை ஊழியர் பலி

■ வி.ரி.சகாதேவராஜா



கல்முனைப் பிராந்தியத்திலுள்ள பாலமுனை கொவிட் சிகிச்சை வைத்தியசாலையில் முதலாவது மரணம், நேற்று (10) அதிகாலை சம்பவித்துள்ளது.

காரைதீவு பிரதேச சபை ஊழியரான விநாயகமூர்த்தி சுரேந்திரன் என்பவரே இவ்விதம் கொரோனா தொற்றுக்குள்ளாகி மரணித்துள்ளார்.

கடந்த 4ஆம் திகதி, பிரதேச சபை ஊழியர்களில் ஒரு தொகுதியினருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் சோதனையில், சகோதரர்களான இருவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு, பாலமுனை கொவிட் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

கடந்த 6 நாள்களாக அங்கு சிகிச்சை பெற்று வந்த இவர்களில் மூத்தவரான வி.சுரேந்திரன் நேற்று மரணித்துள்ளார்.

காரைதீவு பிரதேச சபையில் பணியாற்றும் அவ்வூழியரின் திடீர் மரணம் தொடர்பாக தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் அனுதாபம் தெரிவிக்கையில், "இவருடைய இழப்பு உண்மையில் பேரதிர்ச்சியைத் தருகின்றது. காரைதீவில் கொரோனாவால் ஏற்பட்ட முதலாவது இழப்பு. இவர் ஒரு நேர்மையான ஊழியர். மக்களுக்கு அன்புடன் சேவை செய்யக் கூடியவர். 34 வயதேயான இளம் குடும்பஸ்தரான இவரது திடீர் பிரிவால் துயரில் ஆழ்ந்துள்ளோம். கூடவே, அச்சமும் அடைந்துள்ளோம். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றேன். குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவிக்கின்றேன்" என்றார்.

மட்டக்களப்பில்

## சுகாதார ஊழியர்கள் கவனயீர்ப்பு

■ வா.கிருஸ்ணா, கனகராசா சரவணன்

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நா.மயூரனின் நியமனம் தொடர்பில், ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் சங்கத் தலைவர் பொய்யான பரப்புரைகளை முன்னெடுத்துவருவதாக அவரின் செயற்பாட்டுக்குக் கண்டனம் தெரிவித்து, மட்டக்களப்பில் சுகாதார ஊழியர்கள், நேற்று (10) காலை கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் கடமையாற்றும் ஊழியர்கள், வைத்தியர்கள், சுகாதார சிற்றூழியர்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் பங்குகொண்டனர்.

கொவிட்- 19 அச்சுறுத்தலிலும் அர்ப்பணிப்புடன் செயற்படும் பணிப்பாளரைக் கேவலப்படுத்தும் வகையில், ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் சங்க தலைவர் கருத்து வெளியிட்டுள்ளதாக, அவர்கள் இதன்போது குற்றஞ்சாட்டினர்.

குறித்த கருத்துகளை அவர் வாபஸ்பெறவேண்டும் என்பதுடன், பணிப்பாளரிடம் பகிரங்க மன்னிப்புக்கோரவேண்டும் எனவும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் வலியுறுத்தினர்.

ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர் சங்கத் தலைவரின் கருத்தானது பணிப்பாளரை நியமனம் செய்துள்ள ஆணைக்குழுவின் செயற்பாட்டுக்கு எதிரான கருத்து எனவும் இது முழு சுகாதாரத் துறையையும் கேவலப்படுத்தும் கருத்து எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



## உள்ளூர் துப்பாக்கியுடன் இருவர் சிக்கினர்

■ கனகராசா சரவணன்



மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேசத்தில் உள்ளூர் தயாரிப்புத் துப்பாக்கியுடன் இருவரை, நேற்று முன்தினம் (09) மாலை கைது செய்துள்ளதுடன், இரு துப்பாக்கிகளை மீட்டுள்ளதாக வவுணதீவு பொலிஸார் தெரிவித்தனர்.


விசேட புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலுக்கமைய, வவுணதீவு பொலிஸ் பிரிவிலுள்ள பாவக்கொடிச்சேனை, நெல்லிக்காடு ஆகிய பிரதேசங்களில் உள்ள இரு வீடுகளை, பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

இதன்போதே, மறைத்து வைக்கப்பட்டிருந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கியுடன் இருவரை கைது செய்ததுடன், இரு துப்பாக்கிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

குளவி கொட்டி

## சிறுவன் வைத்தியசாலையில்

■ அப்துல்சலாம் யாசீம்



திருகோணமலை, கோமரங்கடவல காட்டுப் பகுதியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான சிறுவன், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதையடுத்து, மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இந்திக்கட்டுவெவ பகுதியைச் சேர்ந்த சஸங்க நிரோஷன் எனும் 13 வயதுச் சிறுவனே, நேற்று (10) காலை குளவிக் கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

வீட்டுக்குப் பின்னால் உள்ள காட்டுப் பகுதிக்குள் வீரப்பழம் பறிப்பதற்காக நண்பர்களுடன் சென்ற போது, வீர மரத்திலிருந்த குளவிக் கூடு கலைந்ததில், சிறுவனுக்கு குளவி கொட்டியுள்ளதாகத் தெரியவருகின்றது.

'எக்ஸ்பிரஸ் பேர்ள்'இன் பொருள்கள்

# மன்னாரிலும் கரையொதுங்கின

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்





கொழும்புத் துறைமுகத்துக்கு அருகில் தீப்பற்றிய எம்.வி.எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து வெளியேற்றப்பட்ட ஆபத்தான பொருட்கள் என சந்தேகிக்கப்படும் சில பொருட்கள், மன்னார் -வங்காலை கடற்பரப்பில் நேற்று (10) காலை கரையொதுங்கியிருந்தன என, வங்காலை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

வங்காலை பொலிஸ் நிலைத்துக்கு அருகில் உள்ள கடற்பரப்பிலேயே, மேற்படி சிறிய பிளாஸ்டிக் உருண்டைகள் என சந்தேகிக்கப்படும் பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளன என, மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த சிறிய உருண்டைகள் கடற்கரையோரங்கள் முழுவதிலும் சிதறிக் கிடந்ததை அவதானிக்க கூடியதாக இருந்தது. குறிப்பாக, இலட்சக்கணக்கான சிறிய பிளாஸ்டிக் துண்டுகள், முகக் கிரீம் ஒன்றும் கரையொதுங்கியிருந்தன.

இதையடுத்து, அப்பகுதிக்குச் சென்ற மன்னார் கடற்படையினர், நீரியல் வள திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கரையொதுங்கிய பொருள்களைப் பார்வையிட்டதுடன், அதன் மாதிரிகளையும் சேகரித்தனர்.

இதேவேளை, குறித்த கடல் பகுதிக்கு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன், மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி ஸ்ரான்லி டி மேல் உள்ளிட்ட அதிகாரிகள் வருகை தந்து பார்வையிட்டனர்.



நேற்று முன்தினம் (09) நள்ளிரவு முதல் தற்போது வரை மேற்படி பொருள்கள் கரை ஒதுங்கி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளதென்று, வங்காலை மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், அரிப்பு பகுதியிலும் குறித்த பிளாஸ்டிக் பொருள்கள் கரை ஒதுங்கியுள்ளதாக அறியமுடிகின்றது.

## நந்திக்கடலுக்கு சென்றவரை காணவில்லை

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு, நந்திக்கடல் பகுதியில், கடற்றொழிலுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளதாக, புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆனந்தபுரம் பகுதியைச் சேர்ந்த 5 பிள்ளைகளின் தந்தையான வேலு கணேஸ் (வயது 44) என்பவரே, இவ்வாறு காணாமல் போயுள்ளதாக, முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர், நந்திக்கடலில் மீன்பிடிப்பதற்காக நேற்று முன்தினம் (09) இரவு, வீட்டில் இருந்து சென்ற நிலையில், இதுவரை வீடு திரும்பவில்லை என, உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதானா வைத்தியசாலையின்

## விசேட அறிவிப்பு

■ எஸ்.நிதர்ஷன்




கொரோனா பரவலையடுத்து விதிக்கப்பட்டுள்ள பணயக் கட்டுப்பாடு காரணமாக, யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக் களத்தில் (Clinic) வைத்தியசேவை பெறும் நேயாளர்களுக்கான மருந்துகளை, தபால் மூலமாக அனுப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே, நோயாளர்கள் தேவையான மருந்துகளை கீழ் குறிப்பிட்ட தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு, பெயர், கிளினிக் இலக்கம், முழுமையான விலாசம், தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் என்பவற்றை அறியத்தந்தால், அந்த மருந்துகள் உங்களுக்கு தபால் மூலமாக எவ்விதக் கட்டணமுமின்றி அனுப்பி வைக்கப்படும்.

நோயாளர்கள் வசதி கருதி, ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட தொலைபேசி இலக்கங்களுடன் மேலும் இரண்டு நேரடி தொலைபேசி இலக்கங்கள் இச்சேவையில் இணைக்கப்பட்டுள்ளன.

புதிய தொலைபேசி இலக்கங்கள்:

1) 021 222 2268
2) 021 315 2921

ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நோயாளர்கள் தொடர்புகொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:

3) 021 221 4249
4) 021 222 2261
5) 021 222 3348

## கம்பிகளில் கைவைத்த அறுவர் கைது



மன்னார் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் காற்றாலையில் இருந்து கேபிள் கம்பிகளைத் திருடிய 06 பேர், நேற்று (10) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களுள், காற்றாலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த நபர் ஒருவரும் உள்ளடங்குவதாக, தலைமன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சந்தேகநபர்களால் அங்கு நிர்மாணப் பணிகளுக்காக கொண்டு வரப்பட்டிருந்த 340 மீற்றர் கேபிள் கம்பிகள் இவ்வாறு திருடப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் கூறினர்.

ஆடைத் தொழிற்சாலைக்கு எதிராக

## இருவேறு மனுக்கள் தாக்கல்

### மனு மீதான விசாரணை 15 வரை ஒத்திவைப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்



கிளிநொச்சியில் இயங்கி வரும் ஆடைத் தொழிற்சாலையிலிருந்து தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக தொடரப்பட்டுள்ள இருவேறு வழக்கு விசாரணைகளும், ஜூன் 15ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியில் இயங்கி வரும் ஆடைத் தொழிற்சாலையிலிருந்து தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துமாறு, கரைச்சி பிரதேச சபையாலும், பொதுமக்களாலும் இருவேறு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

கரைச்சி பிரதேச சபையால், நேற்று முன்தினம் (09), சமர்ப்பிக்கப்பட்ட மனு, கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதவான் பா.லெனின்குமார் முன்னிலையில் நேற்று (10) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது, ஆடைத் தொழிற்சாலைகளை மூடித்தான் தொற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமா என்ற விளக்க அறிக்கையைக் கோரிய நீதவான், மனு மீதான விசாரணையை ஜூன் 15ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை, குறித்த ஆடைத் தொழிற்சாலையில் இருந்து சமூகத் தொற்று ஏற்படாது கட்டுப்படுத்தும் வகையில், ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக மூடுமாறு, பொதுமக்கள் 6 பேர், நேற்று (10) சட்டத்தரணி ஊடாக மனுவொன்றைத் தாக்கல் செய்தனர்.

குறித்த மனுவையும் ஏற்றுக்கொண்ட நீதவான், மனு மீதான விசாரணையை, ஜூன் 15ஆம் திகதி வரை ஒத்திவைத்தார்.

மானிய உரம் வழங்குவதில் நெருக்கடி:


## மாவட்டச் செயலாளர் விளக்கம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான உரம் கையிருப்பில் இல்லாத காரணத்தால், மானிய உரத்தை வழங்க முடியாதிருப்பதாக, மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், மாவட்டத்தில், சிறுபோக செய்கைக்கான மானிய உரம் வழங்குவதற்கு ஏற்ற வகையில் களஞ்சியப்படுத்தி வைக்கப்படாமையால், மானிய உரத்தை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றார்.

இருந்தபோதும், தேவையான உரத்தைப் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், அவர் கூறினார்.





முறையற்ற உர விநியோகம்;

# இரண்டாவது தடவையும் இடைநிறுத்தம்

ஆ.ரமேஸ்

கந்தப்பளை கமநல சேவை காரியாலயத்துக்கு உட்பட்ட பிரதேச விவசாயிகளுக்கு இரசாயன உரம் விநியோகிக்கும் செயற்பாடு நேற்று (10) இரண்டாவது தடவையாக முன்னெடுக்கப்பட்ட போதும் அங்கு அதிகளவான மக்கள் குவிந்ததால் உர விநியோக நடவடிக்கை பொலிஸாரால் நிறுத்தப்பட்டது.

இதன்போது, கந்தப்பளை கமநல சேவை காரியாலயம், உரத்தை விவசாயிகளுக்கு விநியோகிக்க, மாற்று நடவடிக்கை எடுக்கும் வரை, உரம் வழங்குவதை இடைநிறுத்தம் செய்துள்ளதாக கந்தப்பளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.டி. விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இம்மாதம் முதலாம் திகதி கந்தப்பளை விவசாயிகளுக்கு உரங்களை வழங்க நடவடிக்கை மேற்கொண்டபோது, முறையற்ற விநியோகம் காரணமாக அமைதியின்மை ஏற்பட்டதால், உர விநியோகம் இடைநிறுத்தப்பட்டது.

இந்த நிலையிலேயே, நேற்று (10) உர விநியோக நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போது, பயணக்கட்டுப்பாடு விதிகளையும் மீறி 500க்கும் அதிகமான விவசாயிகள் அங்கு வருகைத் தந்தனர்.

இதனால், விவசாயிகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில், உர விநியோகத்துக்கு மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறு, அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதுடன், விநியோக நடவடிக்கை இடைநிறுத்தப்பட்டது.



## கிராமத்துக்குச் சென்ற இலங்கை வங்கி...

சுமணசிறி குணதிலக

பயணக்கட்டுப்பாடு அமல்படுத்தப்பட்டுள்ளதால், வங்கி அலுவல்களை நிறைவேற்ற முடியாத மக்களுக்கான இலகு சேவையை வழங்க, பிபிலை பிரதேச இலங்கை வங்கியின் கிளை அலுவலகத்தின் நடமாடும் வாகனம் கிராமங்களுக்குச் சென்று மக்களின் தேவைகளை நிறைவேற்றியது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு

## மீண்டும் இலவச பாடநூல்

ஏ.ஏ.எம்.பாயிஸ்

அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவு காரணமாக, தமது பாடநூல்களை இழந்த மாணவர்களுக்கு அவற்றை மீளவும் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைய, இரத்தினபுரி மாவட்டத்தில் தமது பாடநூல்களை இழந்த மாணவர்கள், தத்தமது பாடசாலை அதிபர்களின் ஊடாகத் தொடர்பு கொள்வதன் மூலம், இலவச பாடநூல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிக்கோயாவில் சிறுத்தையின் உடலம் மீட்பு

கேதீஸ்

டிக்கோயா தோட்டப் புதர் ஒன்றிலிருந்து நேற்று முன்தினம் (09) சிறுத்தையின் உடலம் மீட்கப்பட்டதென, நல்லதண்ணி வனவிலங்கு திணைக்கள அதிகாரி பிரபாஸ் கருணாதிலக தெரிவித்தார்.

மிருக வேட்டைக்காக அமைக்கப்பட்ட முள்வேலியில் சிக்கியே இச்சிறுத்தை உயிரிழந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

மாதத்தில் 8 நாள்களே வேலை

# நிர்வாகத்துக்கு எதிராக தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

எஸ்.சதீஸ்



பொகவந்தலாவை- கொட்டியாகல கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு தொழிலாளர்களால் நேற்று (10) தோட்ட நிர்வாகத்துக்கு எதிராக, எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மாதத்தில் தமக்கு 8 நாள்கள் வேலையே வழங்கப்படுவதாகத் தெரிவித்து, 250க்கும் மேற்பட்ட தொழிலாளர்களால், இந்த எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தொழிலாளர்கள், வாரத்தில் 2 நாள்கள் என மாதத்தில் 8 நாள்களே வேலை வழங்கப்படுவதால் தாம் பொருளாதார ரீதியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

இதேவேளை இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்ட போது, தொழிற்சங்கம் ஒன்றின் தோட்டத் தலைவர் ஒருவர், 7 தொழிலாளர்களுடன் சென்று கொழுந்து பறிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்ட நிலையில், குறித்த தொழிற்சங்கம் மக்களின் ஆர்ப்பாட்டத்தை காட்டிக்கொடுத்து விட்டதாக மக்கள் குற்றஞ்சுமத்தினர்.

மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை

# 1,035ஆக குறைவடைந்தன

அஜித்லால் சாந்தஉதய

சப்ரகமுவ மாகாண சபையால் நிர்வகிக்கப்படும் 81 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டதால், மாகாண பாடசாலைகளின் எண்ணிக்கை 1,035ஆக குறைவடைந்துள்ளன.

அரசாங்கத்தின் தேசிய பாடசாலைகள் 1,000 வேலைத்திட்டத்தின் கீழ், இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள 750க்கும் அதிகமானவர்களைக் கொண்ட 50 பாடசாலைகளும் கேகாலை மாவட்டத்தில் 31 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டன.

இதற்கமைய, பலாங்கொடை கல்வி வலயத்தில் 10 பாடசாலைகள், எம்பிலிபிட்டிய கல்வி வலயத்தில் 14, நிவித்திகல வலயத்தில் 9, இரத்தினபுரி கல்வி வலயத்தில் 17, தெஹியோவிட்ட கல்வி வலயத்தில் 12, கேகாலை வலயத்தில் 11, மாவனெல்ல கல்வி வலயத்தில் 8 பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டன.

குறித்த பாடசாலை நிர்வாக நடவடிக்கைகள், வள அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன இதற்கு முன்னர். மாகாண சபைகளால் நிர்வகிக்கப்பட்ட நிலையில், இவை தற்போது தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டதன் பின்னர், இப்பாடசாலைகளின் நிர்வாக செயற்பாடுகள், மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் கீழேயே முன்னெடுக்கப்படவுள்ளன.

புலமைப்பரிசில் மாணவர்களுக்கு

## இணையம் ஊடாக இலவச வினாத்தாள்

ரா.கமல்




இந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச பரீட்சை வினாத்தாள்களை இணையத்தளம் ஊடாக, விநியோகிக்க சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களத்தின் ஆரம்ப கல்விப்பிரிவும் 'ஈ-நென பியச' இணையத்தள குழுவினரும் இணைந்து இச்சமூக சேவையை முன்னெடுக்கின்றனர்.

எனவே, இதில் பங்குபற்றி மாணவர்கள் பயிற்சிகளை பெற்றுக்கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வருவாய் சேகரிப்பை

# இணைய மையப்படுத்தும் நிகழ்வு ஆரம்பம்



எம். செல்வராஜா

ஊவா மாகாண இறைவரித் திணைக்களத்தின் வருவாய் சேகரிப்பை இணைய மயப்படுத்தும் நிகழ்வு நேற்று (10) ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில், ஊவா மாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் அனுசரனையின் கீழ், ஊவா மாகாண இறைவரித் திணைக்களம், மாகாண பதிவாளர் திணைக்களம், ஊவா மாகாண உள்ளூராட்சி அமைச்சு என்பன இணைந்து முன்னெடுக்கும் குறித்த திட்டம் ஊடாக, பொதுமக்களுக்குச் சேவையை வழங்கி, நீதி, நியாயமான சமுதாயத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட கணினித் தொகுதியொன்றும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

மூன்று நாள்களில் 40,000 பேருக்கு

# தடுப்பூசி செலுத்தத் திட்டம்

டி.ஷங்கீதன்



நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் 12, 13, 14 ஆகிய மூன்று தினங்களில் 40,000 தடுப்பூசிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபட தெரிவித்துள்ளார்.

குறித்த 3 நாள்களில் நுவரெலியா மாவட்டத்தில் 98 கிராம சேவகர் பிரிவுகளிலுள்ள 60 வயதுக்கு மேற்பட்ட சுமார் 40,000 பேருக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

அரசாங்கத்தின் தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் நுவரெலியா மாவட்டத்துக்கு 50,000 தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுதாகத் தெரிவித்த அவர், அரச ஊழியர்கள், இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை மின்சார சபை, உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், பணியாளர்கள், 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசியை செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றார்.

மேலும் தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ள வருகின்றவர்களுக்கு விசேட போக்குவரத்து அனுமதிகள் தேவையில்லை என்றும் தெரிவித்தார்.

இணைய சமிக்ஞைக்காக

# தேயிலை மலைகளில் ஏறும் அவலம்

மஹிந்தகுமார்





இரத்தினபுரி மாவட்டத்தின் இம்புல்பே, புதுக்காடு தோட்டத்தைச் சேர்ந்த மாணவர்கள், தமது கற்றல் செயற்பாடுகளுக்கான அலைபேசி சமிக்ஞைக்காக தேயிலை மலைகளின் உச்சிக்குச் செல்லும் அவலம் ஏற்பட்டுள்ளது.

குறித்த தோட்டத்தைச் சேர்ந்த சுமார் 80 மாணவர்கள், இணையவழி கற்றலுக்கான உரிய வசதிகளின்றிச் சிரமப்படுவதுடன், சீரான அலைபேசி சமிக்ஞையும் கிடைப்பதில் சிக்கலை எதிர்நோக்கியுள்ளனர்.

அத்துடன் சீரற்ற வானிலையால் இடியுடன் கூடிய மழையும் பெய்து வருவதால், இம்மாணவர்களின் இணையவழி கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

# கட்டுப்பாட்டில் கட்டுக்கடங்காது போவதால் சுருங்கும் வாழ்க்கை

படுக்கைக்குச் சென்று கண்விழித்தெழும்புகையில், கண்களையும் காதுகளையும் நம்பமுடியாத அளவுக்குச் செய்திகளைக் கேட்கவும் பார்க்கவும் வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்குள் பாமர மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

பயணக் கட்டுப்பாடு அமலிலிருக்கும் இக்காலப்பகுதியில், கட்டுப்பாட்டைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட சிலபல பெரும்முதலைகள், கட்டுக்குள் அடக்கிக்கொள்ள முடியாத அளவுக்கு, அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்துக் கொண்டுள்ளன.

'என்ன செய்வது? உயிர்வாழ்வதற்கு அரைவயிறு, கால் வயிறேனும் சாப்பிட்டுவிடவேண்டும்' என நினைக்கும் பாமர மக்கள், கிடைப்பதைக் கொண்டு ஒவ்வொரு பொழுதுகளையும் கழித்துவருகின்றனர். அவ்வாறானவர்கள், தங்களுடைய ஓரிரு வேளைகளுக்கான உணவைத் தவிர்ப்பது மட்டுமன்றி, வாழ்நாளையும் குறைத்துக்கொள்கின்றனர்.

இந்தப் பயணக்கட்டுப்பாட்டுக் காலப்பகுதியில், பெரும்பாலானவர்கள் போஷாக்கான உணவை உட்கொள்வதில்லை; 'கிடைப்பதை உண்போம்' எனும் எண்ணத்தில் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

ஆனால், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும், கேட்டுச் சகித்துக்கொள்ள முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளது. அரிசியில் தன்னிறைவு காணமுடியுமெனக் கொக்கரித்துக் கொண்டாலும், சாதாரண மக்கள் உண்ணும் அரிசியின் விலையும் கிடுகிடுவென அதிகரித்துள்ளது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, சுருட்டிக்கொள்ள நினைப்பதைக் கைவிட்டு, நியாயமான கட்டுப்பாடான விலைகளில் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யவேண்டும். பாமர மக்களில் பலரும், அங்காடிகளுக்குச் செல்வதில்லை; அக்கம் பக்கத்து கடைகளைளும் பெட்டிக்கடைகளுமே தஞ்சமென இருப்பர்.

அவ்வாறான விசுவாசம்மிக்க நுகர்வோரை, விலையை அதிகரிப்பதன் ஊடாகத் தூக்கியெறிந்துவிடக்கூடாது. பயணக்கட்டுப்பாட்டில், இரட்டிப்பாகச் சம்பாதித்துக்கொள்ள வேண்டுமென்பதில் பலரும் குறியாகவே இருப்பர்.

வீடுகளிலிருந்து வெளியேறமுடியாது. ஆனால், வீடுகளுக்கு அருகே வரும் தள்ளுவண்டிகளில் குவிந்திருக்கும் மரக்கறிகளின் விலைகள் நாவை கொன்றுவிடுகின்றன. சமைப்பதற்குத் தேவையான இதரபொருள்களின் விலைகளும் வானத்தை மல்லாக்கப் பார்த்துக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு துறைகளைச் சார்ந்தவர்களும் ஏதோவொரு வகையில் மற்றைய துறைகளைச் சார்ந்தவர்களே; சார்ந்தே இருக்கவேண்டும். அந்த விதியை எவராலும் மாற்றமுடியாது.

பயணக்கட்டுப்பாடு அமலில் இருக்கும் போது, அத்தியாவசியப் பொருள்களின் விலைகளே கண்மூடித்தனமான வகையில் உயர்ந்துள்ளனவெனில், அத்தியாவசியமற்ற பொருள்களைக் கொள்வனவு செய்யும்போதுதான் தலை சுற்றும். இத்தனை நாள்களாக மூடப்பட்டிருந்ததால் ஏற்பட்ட இழப்புகளையும் ஒரேடியாக சம்பாதித்துக்கொள்ளும் வகையில், அத்தியாவசியமற்ற பொருள்களின் விலைகளும் கண்மூடித்தனமாக உயர்த்தப்படும் என்பது கடந்தகால கசப்பான அனுபவங்களாகும்.

நாளாந்தம் கொள்வனவு செய்யும் அத்தியாவசிய பொருள்களின் விலைகளே, நிமிடத்துக்கு நிமிடம், கடைக்குக் கடை, மாறிகொண்டே செல்லும் நிலையில், அத்தியாவசியமற்றத்தைச் சிந்திப்பதில் அர்த்தமில்லை. ஆகையால், மனிதர்கள்தான் அத்தியாவசியம் குறித்துச் சிந்திக்கவேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

சருகுகள் உதிரும்போது, எனது நெஞ்சமும் உலருகின்றது. விருட்சங்களுக்குப் பச்சை வண்ண உடை உடுத்தியவள் நீ அல்லவா? உனது வண்ணமே வையகத்தில் அநேகம்.

அதுமட்டுமா, உஷ்ணத்தின் கொடூரத்தில், உங்கள் அரவணைப்பு மலை நாட்டின் குளுமையைக் காட்டுகின்றது. விரிந்த பச்சைவண்ணக் கூடாரத்தில், பசுமை தேடும் பட்சிகள், பசுக்கள், படுக்கை வசதிகளற்ற பரதேசிகள் ஆகியவற்றுக்கு, மாளிகையின் மேலான குளிர் படுக்கை போன்றவைகள், உங்கள் தானத்தின் உன்னத கொடை அல்லவா? நீங்கள் யாவருக்கும் உறவுக்காரர்; தானம் வழங்குவதில் ஈடிணையற்ற பெரும் வள்ளல்.

காற்று வரும்போது தூற்றுகின்றோம். உங்கள் அரவணைப்பில், மனிதர்களையும் சகல உயிர்களையும் ஒரே பார்வையில் பார்க்கின்றீர்கள். இயற்கையின் படைப்பின் நாயகி நீங்கள் அல்லவா!

விருட்சங்கள், பூமி தந்த வரம். உலகுக்காக அது தருவது, குளிர்மையையும் மூச்சுவிட உதவும் ஒட்சிசனையும் ஆகும். 'நீங்கள் இன்றி, மழை இல்லை; விருட்சத்தின் ஆருயிர் வாரிசுகளாகப் பச்சை நிற அழகிகளாக நீங்கள் துளிர்ப்பீர்கள்; உதிர்வீர்கள். மீண்டும் துளிர்த்து, ஓங்கும் நித்திய சொந்தம்; ஆன்மாவுக்குள் ஆன்மாவாக நீங்கள் மட்டுமே!

பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# 'வானமேறி வைகுண்டம் போகும் நினைப்பு'



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்த ஞாயிற்றுக்கிழமை, நிகர்நிலையில் நடைபெற்ற ஒரு கலந்துரையாடலில், பங்குகொள்ளக் கிடைத்தது. 'பிளவுற்ற தமிழ்த் தேசத்தில் விடுதலைப் போராட்டம்' என்ற தலைப்பில், நோர்வேயில் பிறந்து, வளர்ந்த மாணவியொருவர் தனது இளமானிப்பட்ட ஆய்வை முன்வைத்துப் பேசியிருந்தார்.

அந்த மாணவி, நோர்வேயில் பிறந்து, வளர்ந்த இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்தவர். புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களின் இளந்தலைமுறையினர், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை, எவ்வாறு நோக்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கான ஓர் அடிப்படையை, அந்த உரையும் அதைத்தொடர்ந்த கலந்துரையாடலில் அந்த மாணவி முன்வைத்த கருத்துகளும் தந்தன.

குறித்த உரையைத் தொடர்ந்த கலந்துரையாடலில், பங்கேற்றிருந்த முதலாம் தலைமுறையினரும் தங்கள் கருத்துகளை முன்வைத்தார்கள். இந்தக் கலந்துரையாடலில், இரண்டு முக்கியமான விடயங்களை அவதானிக்க முடிந்தது.

முதலாவது, புலம்பெயர் சமூகத்தில் எங்களது மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையே, இட்டு நிரப்ப முடியாத மிக நீண்ட இடைவெளி உள்ளது.

இரண்டாவது, போர் நிறைவடைந்து 12 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், விமர்சனத்தை ஏற்றுக் கொள்ளவோ, தங்கள் செயல்கள் குறித்த சுயவிமர்சனத்தை மேற்கொள்ளவோ, ஈழத் தமிழர்களில் பெரும்பான்மையானோர் தயாராக இல்லை. இந்தப் பின்புலத்திலேயே, சில அடிப்படையான விடயங்களை இக்கட்டுரை பேச விழைகின்றது.

காலங்கள் மாறிவிட்டன; ஆனால், துன்பகரமான உண்மை யாதெனில், 1980களிலும் 1990களிலும் இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த பலருக்கு, இலங்கை வரலாறு, அவர்கள் புலம்பெயர்ந்த காலத்துடன் உறைந்துவிட்டது. அவர்கள், தாங்கள் புலம்பெயர்ந்த காலத்து, இலங்கைச் சூழலின் சட்டகத்துக்குள்ளேயே, இலங்கை இனமுரண்பாட்டை நோக்குகிறார்கள்; இன்றைய இலங்கையையும் நோக்குகிறார்கள். அவர்களது தீர்வுகளும் ஆலோசனைகளும் இதன்பாற்பட்டவை. காலாவதியாகிப் போன சிந்தனைகளை, கோர்வையாக இவர்கள் முன்வைக்கிறார்கள்.

அமெரிக்கா, தமிழர்களுடன் இருக்கிறது; மேற்குலக நாடுகள், எம்முடன் இருக்கின்றன; யூதர்கள் போல, தமிழர்களுக்கும் தீர்வு கிடைக்கும்; சிங்களவர்களுடன் வாழ முடியாது போன்ற கருத்துகள், இந்தக் கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்டன.

இவை, காலாவதியாகிப் போன சிந்தனைகள் ஆகும். இவற்றை நாம், பரிதாபத்துடன் ஒதுக்கியபடி, அப்பால் நகரலாம். ஆனால், இந்தச் சிந்தனைகளின் தோற்றுவாய் யாதென்று நோக்கின், அது இலங்கையின் இனத்துவ வரலாற்றில் ஆழப் பதிந்துள்ளது.

நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மலையகத் தமிழ் என நான்கு தேசிய இனங்களும் பறங்கியர், மலாயர், வேடர் ஆகிய சிறுபான்மைச் சமூகங்களும் இருந்து வருகின்றன. அதன் மூலம், இந்நாடு பல்லினத் தேசியங்களின் நாடாகவே இருந்து வருகிறது. இந்த யதார்த்தத்தைப் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் ஏற்க மறுத்தாலும், வரலாறு இந்த உண்மையைப் பதிவு செய்து நிற்கிறது.

பிரித்தானிய கொலனித்துவம், பிரித்தாளும் சூழ்ச்சியை நடைமுறைப்படுத்திய நிலையில், அத்தகைய கொலனித்துவத்தைப் பாதம் தாங்கி நின்றவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் மேட்டுக்குடி உயர் வர்க்கத்தினர்.

இவர்கள், வெள்ளையரின் ஆதிக்கத்துக்கு அடிமைச் சேவை செய்து வந்ததைப் பெருமையாகவும் அந்தஸ்தாகவும் கருதிக் கொண்டதுடன், பெரும் சொத்துச் சுகங்களையும் பெற்றுக் கொண்டனர். அதேவேளை, தமது வர்க்க சாதிய நிலைகளுக்கு ஊடாக, தத்தமது சொந்த இன, மொழி, மத மக்களை அடக்கி, அவர்கள் மீது அதிகாரம் செலுத்தியும் வந்தனர்.

மக்களைப் பிரித்து, ஒருவரோடு ஒருவர் இணைய விடாது வைத்திருந்ததன் மூலம், தமது சொத்து சுகங்களைப் பேணிப் பாதுகாத்தனர். இதுவே எங்கள் வரலாறு. இந்த வரலாற்றின் தொடர்ச்சியே, தமிழ் மக்களிடம் ஆழமாக விதைக்கப்பட்ட சாதிய, பிரதேச, மத வேறுபாடுகள். இதன் விளைபொருட்களே, இன்று வெளிப்படும் புலம்பெயர்ந்தோரின் சிந்தனைகள் ஆகும்.

இலங்கையில் சிங்களப் பேரினவாதம், பழைய சிங்கள மன்னர்களது மரபு வழி பற்றி அழுத்தம் தெரிவித்துப் பேசுவதும், தமிழ்த் தேசியவாதம் யாழ்ப்பாண இராச்சியம், நாகர்களின் ஆட்சி, வன்னி இராச்சியம் முதலான மன்னர்கள் போன்றோரிலிருந்து, தமது தேசிய வரலாற்றைக் கட்டியெழுப்புவதும் நிலவுடைமைச் சிந்தனையுடன் உள்ள தொடர்பின் அடிப்படையிலானவை.

இலங்கையின் தேசியவாதிகள், முதலாளித்துவத்தை நிறுவும் நோக்கில் தேசிய பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புகிற நோக்கில், தேசிய முதலாளித்துவமாக உருவாக்குவதில் தோல்வியடைந்தனர். ஏகாதிபத்தியத்தை அதன் நவகொலனிய வடிவில் எதிர்கொள்ள அவர்களுக்கு இயலவில்லை.

எனவே, தங்களது தோல்வியும் ஏகாதிபத்தியத்துடன் செய்து வந்துள்ள சமரங்களும் நாட்டின் பொருளாதாரத்தைச் சீர்குலைப்பதன் விளைவாக, மக்கள் நடுவே எழக் கூடிய எதிர்ப்புணர்வைத் திசை திருப்பப் பேரினவாதம் பயன்படுத்தப்பட்டது.

அவ்வாறே, பேரினவாதத்தின் விளைவாக உருவான குறுந் தேசியவாதமும் தனது மேட்டுக்குடிகளின் நலன் கருதி, ஏகாதிபத்திய எதிர்ப்பைத் தவிர்ப்பதுடன் மக்களின் பிரச்சினைகளை முற்றிலும் தேசியவாதக் கண்ணோட்டத்திலேயே அடையாளம் காட்டின.

மேற்கூறியவாறு, தேசிய இனப் பிரச்சினையில் இனப் பகைக் கோட்பாட்டை முன்னிலைப்படுத்துவது இரு தரப்புகளுக்கும் தேவைப்பட்டது. அதேபோலப் பண்பாடு, மதம், மொழித் தூய்மை, சாதியம் போன்ற பலவும், மக்கள் மத்தியில் உள்ள ஆதிக்கச் சிந்தனையின் ஒரு முக்கியமான பகுதியாகத் தொடருகின்ற நிலவுடைமைச் சிந்தனையின் மிச்சசொச்சங்கள் ஆகும். அவை சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசியங்களின் மீது, ஆதிக்கம் செலுத்துமாறு கவனித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறான போக்கு, தென்னாசியாவில் பரவலாகக் காணக் கூடிய ஒன்றாகும். தேசிய இனங்களின் வளர்ச்சியும் அவற்றின் தேசிய அடையாளமும் நிலவுடைமை அடையாளங்களை உதற இயலாமைக்கு, அவற்றின் தலைமைகளது வர்க்க நலன்கள் முக்கியமான காரணமாக அமைகின்றன. இன்றும் அமெரிக்காவையும் மேற்குலகையும் நம்பச் சொல்கிறவர்களின் நிலைப்பாடுகளின் தோற்றுவாய் இதுதான்.

குறித்த கலந்துரையாடலில், தமிழ்ச் சமூகத்தின் உள்முரண்பாடுகள், எவ்வாறு விடுதலைப் போராட்டத்தை வலுவிழக்கச் செய்தன என்று சான்றுகளுடன் ஆய்வு மாணவி தெரிவித்த கருத்துகள் முக்கியமானவை.

குறிப்பாக, சாதிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் அன்றுதொட்டு இன்றுவரை, தமிழ்ச் சமூகத்தில் நிலவும் வேறுபாடுகள், பேசப்பட வேண்டியன என்றும் அவை களையப்படாமல், தமிழ் மக்களுக்கான விடுதலைப் போராட்டம் சாத்தியமில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான எதிர்வினைகள், 'வரலாற்றைப் படித்துவிட்டு வாருங்கள்'; 'தமிழருக்கு நாடில்லை; 'அதுதான் பிரச்சினை'; 'அனைத்துக்கும் சிங்களஅரசு தான் காரணம்' போன்ற திசைகளில் அமைந்தன. இந்த எதிர்வினைகள் காட்டிநிற்கின்ற செய்தி யாதெனில், தமிழ்ச் சமூகத்தில் நிலவுகின்ற அகமுரண்பாடுகளைப் பற்றிப் பேசவோ, விமர்சிக்கவோ தயாராக இல்லை என்பதுதான்.

நாம் என்ன தவறிழைத்தோம் என்பதை விட்டுவிட்டு, பழியைப் புறத்தே போடுவதே வழக்கமாகி விட்டது.

ஒரு முக்கியமான கேள்வியை ஒருவர் அக்கலந்துரையாடலில் கேட்டிருந்தார். "பலஸ்தீனர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை ஒழுங்குசெய்தால், பலநூறு வெளிநாட்டவர்கள் கலந்து கொள்கிறார்களே? ஆனால், நாங்கள் செய்தால் ஏன் வருகிறார்கள் இல்லை'?

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், பலஸ்தீனியர்கள் ஏனைய நீதிக்கான போராட்டங்களில் பங்குபெறுகிறார்கள்; ஒடுக்கப்பட்ட மக்களின் பக்கம் நிற்கிறார்கள்; நீண்ட தொடர்ச்சியான ஊடாட்டங்களின் ஊடு, பல்வேறு களங்களில் தங்களுக்கான ஆதரவுத்தளத்தை உருவாக்கி இருக்கிறார்கள். போராட்டங்களின் போது அவர்கள், பத்தாவின் பதாகைகளையோ ஹமாஸின் பதாதைகளையோ ஏந்தியிருப்பதில்லை. தங்கள் போராட்டத்தின் தேவையை, அந்தந்த நாட்டு மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்திருக்கிறார்கள்.

நாம் முதலில், எம்மை யாரோடு அடையாளப்படுத்துகிறோம் என்ற முடிவுக்கு வரவேண்டும். அக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட சிலர், தமிழரை இஸ்ரேலியருடன் ஒப்பிட்டனர். நாம் ஒடுக்குமுறையாளர்களோடு எம்மை அடையாளப்படுத்துகிறோமா அல்லது, ஒடுக்கப்படுவோரோடு எம்மை அடையாளப்படுத்துகிறோமா என்ற வினாக்கள், எமது நண்பர்கள் யார் என்ற வினாவுக்கான பதிலைத் தரவல்லது.

புலம்பெயர்ந்த தமிழ்ச் சமூகத்தில், ஜனநாயக மறுப்பு முக்கிய பண்பாயுள்ளது என்பதையும் கலந்துரையாடலில் கலந்துகொண்ட இரண்டாம் தலைமுறையினர் உதாரணங்களுடன் எடுத்துக்காட்டினர். இவை, எமது சமூகம் பற்றிய அடுத்த தலைமுறையினர் கொண்டிருக்கின்ற கருத்துகள் என்பதை, நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

புலம்பெயர் சமூகத்தால் எல்லாம் இயலும் என்றதொரு மாயை, இலங்கையின் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களிடையே உருவாக்கப்பட்டுள்ளது. அந்த மாயை, இன்னும் சில காலத்துக்குத் தொடரும்; அதற்குத் தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் உள்ள 'குடுகுடுப்பைக்காரர்கள்' வழிசெய்வார்கள்.

'பேச்சுப் பல்லக்கு, தம்பி கால்நடை' வகையறாக்கள், புலம்பெயர் சமூகத்தில் நிறையவே உண்டு. அதனால் தான், தீர்வுகளை உள்ளே தேடாமல், வெளியில் தேடியபடி காலம் கடத்துகிறார்கள்.

'பாதிக்கப்பட்டோம்' என்ற குரலோடு, ஒரு தசாப்தத்துக்கு மேல் கடந்தாயிற்று. இன்று சில தசாப்தங்களுக்கு இது பயன்படும். ஏனெனில், இது சிரங்குப் புண் மாதிரி, சொறியச் சொறியச் சுகமாய் இருக்கும். நாம் விரும்பினால், 'சொறிந்தபடி வானமேறி வைகுண்டம் போகிற நினைப்பில்' இருக்கலாம்.

## கடிதங்கள்

ஒட்டுசுட்டான் வைத்தியசாலையில்

### நீண்ட நேரம் காத்திருக்கும் நோயாளர்கள்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில், நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

நோயாளர்கள், வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவில் நீண்ட நேரம் வைத்தியருக்காகக் காத்திருக்க வேண்டி உள்ளதாகவும் நீண்ட நேரம் காத்திருந்த நோயாளர்கள், "வைத்தியர் எங்கே" என வைத்தியசாலை ஊழியர்களிடம் கேட்டால், வைத்தியர் விடுதியில் இருப்பதாகப் பதில் அளிக்கப்படுகின்றது.

கொவிட்- 19 அச்சுறுத்தல் காரணமாகப் பயணத் தடைகளுக்கு மத்தியில், ஒட்டுசுட்டான் வைத்தியசாலையை நம்பிச் செல்கின்ற நோயாளர்களை, நீண்ட நேரம் காத்திருக்க வைப்பது ஏற்றுக் கொள்ள முடியாது. மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளில் நோயாளர்களுக்குரிய சிகிச்சைகளை விரைவாக வழங்கி, வீடுகளுக்குச் செல்லுங்கள் என வைத்தியர்கள் அனுப்பி வைக்கும் நிலையில், ஒட்டுசுட்டான் பிரதேச வைத்தியசாலையில் வைத்தியருக்காக காத்திருந்து நோயாளர்கள் சிகிச்சை பெறாமலே வீடு செல்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாக முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் ச. சத்திய சுதர்சனும் கேட்டுக்கொண்டுள்ளார்.

நடராசா கிருஸ்ணகுமார்

# ஆடைத் தொழிற்சாலைகளில் ஊழியர் வரவில் வீழ்ச்சி

ஆடைத் தொழிற்சாலைகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படுவது அதிகரித்துள்ள நிலையில், சகல உற்பத்தி வலயங்களிலும் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால், ஊழியர்கள் பணிக்குச்.க சமூகமளிப்பதில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.



தற்போது நடைமுறையிலுள்ள பயணக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் பணிக்கு சமூகமளிப்போரின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என சுதந்திர வர்த்தக வலய உற்பத்தியாளர்கள் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் தம்மிக பெர்ணான்டோ தெரிவித்தார்.

தொழிற்சாலை பணியாளர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகளும் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளன. கட்டுநாயக்கவில் 6,000, பியகமவில் 2,600, மீரிகமவில் 1,500, வத்துபிட்டிவலயில் 2,000, ஹொரணவில் 1,500 பேர் எனத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, கண்டி, பல்லேகலவைச் சேர்ந்த அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

ஏப்ரல் மாதத்தில் தடுப்பூசி வழங்க ஆரம்பித்த நிலையில், தற்போது எவ்வித காரணங்களும் வழங்கப்படாமல் இந்தப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

உற்பத்தி வலயங்களில் தற்போது மேற்கொள்ளப்படும் பரிசோதனைகளில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. தினசரி 600 பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றன என பெர்ணான்டோ குறிப்பிட்டார்.

பிராந்திய போட்டியாளர்களான பங்களாதேஷ் போன்ற நாடுகள், எவ்வித தடங்கல்களுமின்றித் தமது உற்பத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலையில், மூன்றாம் அலை காரணமாக, இந்தப் பிரச்சினைக்கு இலங்கை முகங்கொடுத்துள்ளது.

இலங்கையின் ஆடைத் தொழிற்துறை வருமானம், நடப்பு ஆண்டில் 20 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கொவிட்-19 தொற்றுப் பரவல், மூன்றாம் அலை காரணமாக, தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளமை காரணமாக, இந்த நிலைக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் என துறைசார் நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஏற்கெனவே தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு, அவர்களுடன் நெருக்கமான தொடர்புகளைப் பேணியவர்களை இனங்கண்டு தனிமைப்படுத்தப்பட்டு உள்ளமையால், பணிக்குச் சமூகமளிப்போரின் எண்ணிக்கை குறைந்துள்ளதுடன், இவ்வாறு தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமையால் அச்சம் காரணமாகப் பணிக்கு சமூகமளிக்காமல் இருப்போரும் உள்ளதாக துறைசார் நிபுணர் ஒருவர் குறிப்பிட்டார்.

“வைரஸ் தொடர்பாக நாம் பல மூட நம்பிக்கைகளையும் மக்கள் மத்தியில் அளவுக்கு அதிகமான பீதியையும் ஏற்படுத்தியுள்ளோம். இதனால் பலர் பணிக்கு சமூகமளிக்க அஞ்சுகின்றனர்” என அந்த நிபுணர் மேலும் குறிப்பிட்டார்.

# தேசிய வியாபார தொலைபேசி இலக்க விவரத்திரட்டு 2021/22 வெளியீடு

SLT-MOBITEL இன் தேசிய வியாபார தொலைபேசி இலக்க விவரத் திரட்டு (Rainbow Pages) அண்மையில் புதிய தோற்றத்தில் டிஜிட்டல், அச்சு பிரசுரம் ஆகியவற்றில் வெளியிடப்பட்டிருந்தது. இந்தப் புதிய திரட்டலில் பல்வேறு டிஜிட்டல் அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக எழுந்துள்ள தாக்கங்களை வியாபாரங்கள் தாங்கிக் கொள்ள உதவும் வகையிலும், பெறுமதி சேர்ப்பதாகவும் இந்தத் திரட்டு அமைந்துள்ளது.




இலங்கையில் காணப்படும் ஒரே தொலைபேசி இலக்க விவரத் திரட்டாக SLT-MOBITEL இன் தேசிய வியாபார தொலைபேசி இலக்க விவரத் திரட்டு அமைந்துள்ளதுடன், பாவனையாளர்களை, உள்நாட்டு மற்றும் சர்வதேச புகழ்பெற்ற உற்பத்தியாளர்கள், தயாரிப்பாளர்களை இணைப்பது தொடர்பான அதிகளவு நன்மதிப்பைப் பெற்ற திரட்டாகவும் அமைந்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட உள்ளம்சங்கள் தொடர்பில் SLT டிஜிட்டல் இன்போ சேர்விசஸ் பிரைவட் லிமிடெட் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “நாடு முழுவதையும் சேர்ந்த பரந்தளவு வாடிக்கையாளர்களைச் சென்றடைவதற்கும், தகவல்களை வழங்குவதற்கும் சந்தைப்படுத்தல் சாதனமாக வியாபார தொலைபேசி இலக்க திரட்டை பயன்படுத்த முடியும். சந்தையில் தயார்நிலையிலுள்ள சிறந்த தயாரிப்புகளை உற்பத்தி செய்து, இதனூடாக முழுத் துறையையும் புரட்சிகரமானதாக்கிக் கொள்ள பல மில்லியன் ரூபாய்களை வியாபாரங்கள் முதலிடுகின்றன. இன்று, நிறுவனங்கள், சிறிய, நடுத்தரளவு தொழில் முயற்சியாண்மைகள் போன்றன விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களிடையே இடைவெளியை நிவர்த்தி செய்வதற்கு டிஜிட்டல் திரட்டு பயன்படுவதுடன், இதில் ஆயிரக் கணக்கான பாவனையாளர்கள் உள்ளமையையும் அறிந்துள்ளன. இணையத்தளம், ஒன்லைன் விளம்பரம், Search Engine Optimization, டிஜிட்டல் சந்தைப்படுத்தல், மின்னஞ்சல்கள், தகவல்பரிமாற்றங்கள் போன்ற பல்வேறு தெரிவுகளைப் பின்பற்றும் நிலையில், SLT-MOBITEL இடமிருந்து தேசிய வியாபார தொலைபேசி இலக்கத் திரட்டினூடாக வாடிக்கையாளர்களை சென்றடைவது உறுதி செய்யப்படுகின்றது. இம்முயற்சியில் எம்முடன் சகல வியாபார சமூகத்தையும் இணைந்து கொள்ளுமாறு நாம் அழைப்பதுடன், பெருமளவு வாடிக்கையாளர்களை சென்றடையக்கூடியதாக இருக்குமெனவும் தெரிவிக்கின்றோம்” என்றார்.

ஒன்லைன் கட்டமைப்பு ஆற்றல்களுடன் டிஜிட்டல் திரட்டாக தேசிய வியாபார தொலைபேசி இலக்கத் திரட்டு அமைந்துள்ளதுடன், உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், தயாரிப்பாளர்கள், சேவைத் துறைகள், பாரியளவு நுகர்வோர் ஆகிய தரப்பினருக்கு உதவும் வகையிலமைந்த அச்சுத் தெரிவும் காணப்படுகின்றது.

# மேல் மாகாணத்தில் காணிகளின் விலை பெருமளவு அதிகரிப்பு

மேல் மாகாணத்தில் (கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதி தவிர்ந்த) காணிகளின் விலை 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் 74 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக இணையத்தளமொன்று வெளியிட்டிருந்த வருடாந்த விலைச் சுட்டெண்ணில் தெரிவித்துள்ளது.



2018 முதல் 2021 வரையான காலப்பகுதியில் வருடாந்த அடிப்படையில் காணிப் பெறுமதி அதிகரிப்பு என்பது 15 சதவீதமாக அமைந்துள்ளது. அதாவது, முதலீட்டாளர் ஒருவர் காணியில் முதலீடொன்றை மேற்கொண்டு சில வருடங்களுக்கு அதை பேணுவாராயின், அவரின் முதலீடு பெருமளவு அதிகரிக்கும் எனவும் அந்த இணையத்தளம் குறிப்பிட்டுள்ளது.

நிலையான வைப்புகளின் மீதான வட்டி வீதங்கள் குறைந்து செல்லும் நிலையில், காணிகள் மீதான இந்த நிலையான விலை அதிகரிப்பு என்பது, ரியல் எஸ்டேட் துறையில் அதிகளவு இலாபத்தை ஈட்டிக் கொள்வதற்கான வாய்ப்பை புலப்படுத்துவதாக அமைந்துள்ளதாக மேலும் குறிப்பிட்டுள்ளது.

2019 முதல் 2021 வரையான காலப்பகுதியில் நிலையான வைப்புகளுக்கான வட்டி வீதம் 11.41 சதவீதம் என்பதிலிருந்து 6.29 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இதே காலப்பகுதியில் மேல் மாகாணத்தில் காணி விலை அதிகரிப்பு 2019 ஆம் ஆண்டில் 22 சதவீதமாகக் காணப்பட்ட போதிலும், 2021 ஆம் ஆண்டில் 18.56 சதவீதமாக காணப்பட்டது. கொவிட்-19 தொற்றுப் பரவல் காரணமாக இந்தச் சரிவை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

கடந்த நான்காண்டு காலப்பகுதியில், கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், கொலன்னாவ, ஹங்வெல்ல, பேலியகொட, வெல்லம்பிட்டி போன்ற பகுதிகளைச் சேர்ந்த காணிகளின் விலைகள் பெருமளவு அதிகரித்திருந்தன. கம்பஹா மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் களனி, தொம்பே, கடவத்த ஆகிய பகுதிகளில் காணப்படும் காணிகளின் விலைகள் பெருமளவில் அதிகரித்திருந்தன.

## பெற்றோல்,டீசல் விலையைக் கண்டித்து
# தள்ளுவண்டியில் போராட்டம்

புதுச்சேரி

கடந்த 40 நாள்களில் 21 முறை பெற்றோல், டீசலின் விலை உயர்வு ஏற்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து தள்ளுவண்டியில் ஓட்டோவை ஏற்றி நூதனப் போராட்டம் புதுச்சேரியில் நடந்தது.




மத்திய பாரதிய ஜனதா அரசாங்கம் உயர்த்திய பெற்றோல், டீசல் விலையைக் குறைக்க வலியுறுத்தி, ஏஐடியுசி ஓட்டோ, சுற்றுலா வாகனம், பஸ் ஆகிய சங்கங்களின் சார்பில் போராட்டம் நேற்று (10) புதுச்சேரி இசிஆர் வீதியில் நடைபெற்றது.

போராட்டத்தின்போது எரிபொருள் விலை உயர்வால் தற்போதைய சூழலைச் சுட்டிக்காட்டி, ஓட்டோவைத் தள்ளுவண்டியில் ஏற்றி நூதன முறையில் போராடினர்.

போராட்டம் தொடர்பாக ஏஐடியூசி மாநிலப் பொதுச் செயலாளர் சேதுசெல்வம் கூறுகையில், “கொரோனா வைரஸ் தொற்று இரண்டாம் அலை காரணமாக, மக்கள் வேலையின்றி வருமானம் இல்லாமல் கடும் துயரத்துக்கு ஆளாகி உள்ளார்கள்.

இந்த நிலையில் பெற்றோல், டீசல் விலை மே மாதம் முதலாம் திகதியிலிருந்து ஜூன் மாதம் 9ஆம் திகதி வரையிலான 40 நாளில் புதுச்சேரியில் 21 முறை உயர்ந்துள்ளது” என்றார்.

## இந்திய எதிர்க்கட்சிகள்
# ‘பலவீனமானவை’

லக்னோ



இந்தியாவில் எதிர்க்கட்சிகள் பலவீனமாக உள்ளன. எதிர்க்கட்சிகள் பலமாக இருந்திருந்தால், நாங்கள் தெருவில் அமர்ந்து போராடும் சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. எதிர்க்கட்சிகள் பலமாக இருக்க வேண்டும் என நாங்கள்,மேற்குவங்க முதலமைச்சர் மம்தாவிடம் கூறியுள்ளோம்.

இவ்வாறு, பாரதிய கிசான் விவசாய சங்க தலைவர் ராகேஷ் திகாயத் கூறி உள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் மூன்று வேளாண் சட்டங்களை எதிர்த்து விவசாயிகள், டெல்லி எல்லையில், ஆறு மாதங்களாக போராடி வருகின்றனர். போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இதுவரை, 11 சுற்று பேச்சு நடந்துள்ளது.



## அம்பியுலன்ஸ் விபத்து
# கர்ப்பிணி உட்பட மூன்று பெண்கள் பலி

கள்ளக்குறிச்சி

கள்ளக்குறிச்சி அருகே நேற்று (10) அதிகாலை அம்பியுலன்ஸ் வீதியோர மரத்தில் மோதி விபத்துக்குள்ளானதில் கர்ப்பிணி உட்பட மூன்று பெண்கள் உயிரிழந்தனர். மேலும் 3 பேர் படுகாயமடைந்து கள்ளக்குறிச்சி அராங்க மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், புதுப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த நிறைமாதக் கர்ப்பிணிப் பெண்ணுக்கு பிரசவ வலி ஏற்பட்டதால் அருகிலுள்ள புதுப்பட்டு அரசாங்க ஆரம்ப சுகாதார நிலையத்தில் சேர்த்துள்ளனர். பின்னர் அங்கு பணியிலிருந்த மருத்துவர்கள் உடனடியாக கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனைக்குச் செல்லுமாறு அறிவுறுத்தியுள்ளனர்.

இவர்களுடன் புதுப்பட்டு அரசாங்க ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் செவிலியர், அம்பியுலன்ஸ் உதவியாளர் மூங்கில் துறைப்பட்டு கிராமத்தைச் சேர்ந்தவரும் சென்றுள்ளனர். அப்போது ஆலத்தூர் அருகே சென்று கொண்டிருந்தபோது, அம்பியுலன்ஸ் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த வாகனம், வீதியோரத்தில் இருந்த மரத்தில் மோதி விபத்துக்குள்ளானது.

## கொரோனா அச்சத்தைப் போக்க
# நடனமாடிய வைத்தியர்

ஜோலார்பேட்டை



தமிழகத்தில் கொரோனா இரண்டாவது அலை அதிக அளவில் பாதிப்பை ஏற்படுத்தியது. இதனால் திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை அருகே அக்ராவரம் பகுதியில் உள்ள அரசாங்க பொலிடெக்னிக் கல்லூரியில் கொரோனா சிகிச்சை மையம் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கொரோனா தொற்றால் உயிர்ப்பலியும் அதிகரித்ததால் நோயாளிகள் மிகவும் அச்சத்துடன் உள்ளார்கள். அவர்களுக்கு கொரோனா குறித்த அச்சத்தை போக்கும் வகையில் கொரோனா சிகிச்சை மையத்தில் பணிபுரியும் டொக்டர் விக்ரம் குமார், நடனமாடி அவர்களுக்கு பயத்தை போக்குகிறார்.

இதனால் கொரோனா நோயாளிகள் தங்களுக்கு ஏற்பட்ட கொரோனா தொற்றை மறந்து அவர்களும் இயல்பு நிலைக்கு மாறுகின்றனர்.

இதற்காக தினசரி டொக்டர் விக்ரம் குமார் இரவு நேரங்களில் நடனம் ஆடுகிறார். சிகிச்சை பெற்று வீடு திரும்பும் நோயாளிகள் தங்களுடைய திறமையை வெளிப்படுத்தும் வகையில் பாடல், நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் செய்து மற்றவர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்துகின்றனர்.

## குழந்தையின் விரல் விவகாரம்
# மனித உரிமை ஆணையம் கடிதம்

தஞ்சாவூர்



தஞ்சாவூர் அரசாங்க மருத்துவமனையில் பிறந்து 14 நாள்களான குழந்தையின் விரல் துண்டான விவகாரம் தொடர்பாக, மருத்துவக் கல்லூரி துறை இயக்குநர் பதிலளிக்க, மாநில மனித உரிமை ஆணையம், கடிதம் அனுப்பியுள்ளது.

தஞ்சாவூரை அடுத்த காட்டூர் கிராமத்தைச் சேர்ந்த கணேசன் பிரியதர்ஷினி தம்பதிகளின் குழந்தைக்கு வயிற்றில் குறைபாடு இருந்ததால், குளுக்கோஸ் செலுத்துவதற்காக, குழந்தையின் கையில் ‘கெனூலா’ பொருத்தப்பட்டிருந்தது.

இந்நிலையில், அந்தக் குழந்தை மருத்துவமனையில் இருந்து வீடு சென்றது.

அப்போது, அந்தக் குழந்தையின் கையில் இருந்த‘கெனூலா’ வை அகற்ற செவிலியர் ஒருவர் கத்திரிக்கோலால் நறுக்கிய போது, குழந்தையின் கட்டை விரல் துண்டானது.

இதுகுறித்து பத்திரிகைகளில் வெளியான செய்தியின் அடிப்படையில், மாநில மனித உரிமை ஆணையம் வழக்கு பதிவு செய்துள்ளது. மேலும், ஆணைய உறுப்பினர், மருத்துவக் கல்லூரி துறை இயக்குநருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் , ‘குழந்தையின் விரல் துண்டான சம்பவம் குறித்து, 2 வாரங்களில் விளக்கம் அளிக்க வேண்டும்’ என உத்தரவிட்டுள்ளார்.

# கொரோனா பாதிப்பு தமிழகத்தில் குறைந்து வருகிறது

சென்னை

தற்போது சென்னையில் மட்டும் 1,060 தடுப்பூசிகள் கையிருப்பு உள்ளதாகவும், மற்ற 36 மாவட்டங்களில் தடுப்பூசிகள் இல்லை எனவும் சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.




சென்னை சைதாப்பேட்டையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: உண்மை நிலையைச் சொல்வது தான் உகந்தது. தமிழகத்துக்கு இதுவரை ஒரு கோடியே ஒரு இலட்சத்து 63 ஆயிரம் தடுப்பூசிகள் வந்துள்ளன. அதில், 97,62,957 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. தற்போதைக்கு சென்னையில் மட்டும் 1,060 தடுப்பூசிகள் மட்டுமே கையிருப்பில் உள்ளன. மற்ற 36 மாவட்டங்களில் தடுப்பூசி இல்லை.

இந்த ஜூன் மாதத்தில், 37 இலட்சம் தடுப்பூசிகள் தமிழகத்துக்குத் தருவதாக மத்திய அரசாங்கம் கூறியுள்ளது. அதில், ஆறு இலட்சம் தடுப்பூசிகள் 13ஆம் திகதிக்குள் அனுப்புவதாக தெரிவித்துள்ளனர்.

தடுப்பூசிகள் வந்ததும் அதனை மற்ற மாவட்டங்களுக்குப் பிரித்து அனுப்பப்படும். கொரோனா பாதிப்பைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் பல மடங்கு குறைந்து வருகிறது.




ஐ. அமெரிக்கா

உலகுக்கு

# 500 மில்லியன் தடுப்பூசிகளை வழங்கவுள்ள ஐ. அமெரிக்கா

அடுத்த இரண்டு ஆண்டுகளில், 500 மில்லியன் பைஸர் கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை ஏறத்தாழ 100 நாடுகளுக்கு நன்கொடை அளிக்க, ஐக்கிய அமெரிக்காவின் ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக, குறித்த விடயம் குறித்து பரிச்சயமான மூன்று தகவல் மூலங்கள், றொய்ட்டர்ஸுக்கு நேற்று முன்தினம் (09) தெரிவித்துள்ளன.

இவ்வாண்டு 200 மில்லியன் தடுப்பூசிகளையும், அடுத்தாண்டு முதல் அரையாண்டில் 300 மில்லியன் தடுப்பூசிகளையும் 92 குறைந்த வருமானமுடைய நாடுகளுக்கும், ஆபிரிக்க ஒன்றியத்துக்கும் ஐ. அமெரிக்கா வழங்கவுள்ளது.


குறைந்த, மத்திய தர வருமானமுடைய நாடுகளுக்கு கொரோனா தடுப்பூசிகளை விநியோகிக்கும் 'கொவகஸ்' தடுப்பூசித் திட்டத்தின் மூலமே குறித்த நன்கொடைகள் செல்லவுள்ளன. உலக சுகாதார ஸ்தாபனம், தடுப்பூசிகள் மற்றும் நோயெதிர்ப்புக்கான பூகோளத் திட்டத்தாலேயே குறித்த திட்டம் தலைமை தாங்கப்படுகிறது.

மியன்மார்

மண்டலேயில்

## இராணுவ விமானம் வீழ்ந்தது

12 பேர் பலி



மியன்மாரின் இரண்டாவது பெரிய நகரமான மண்டலேக்கு அருகில் இராணுவ விமானம் ஒன்று நேற்று (10) வீழ்ந்து 12 பேர் கொல்லப்பட்டதாக, சமூக வலைத் தளப் பதிவு ஒன்றில் அந்நகர தீயணைப்புச் சேவை தெரிவித்துள்ளது.

மியன்மார் தலைநகர் நகிபிடாவிலிருந்து பைன் ஓ லுவின் நகரத்துக்கு விமானம் சென்றிருந்ததுடன், விழ முன்னர் தரையிறங்க வந்திருந்ததாக, மியன்மார் இராணுவத்தின் மையவட்டி தொலைக்காட்சி சேவை செய்தி வெளியிட்டுள்ளது.

ஆறு இராணுவத்தினரும், பிக்குகளும் குறித்த விமானத்தில் காணப்பட்டதாக ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், விமானியும், தப்பித்த பயணி ஒருவரும் இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாக அங்குள்ள ஒருவர் தெரிவித்துள்ளார்.



ஆர்ஜென்டீனா

## 'காடுகளிலிருந்து வந்தவர்கள் பிரேஸிலியர்கள்'

"இந்தியர்களிலிருந்து வந்தவர்கள் மெக்ஸிக்கர்கள்; காட்டிலிருந்து வந்தவர்கள் பிரேஸிலியர்கள்; ஆனால், நாங்கள் ஆர்ஜென்டீனியர்கள் கப்பல்களிலிருந்து வந்தோம். அக்கப்பல்கள் ஐரோப்பாவிலிருந்து வந்தன" என்று ஆர்ஜென்டீனாவின் ஜனாதிபதி அல்பேர்ட்டோ பெர்ணான்டஸ் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்டீனாவுக்கு விஜயம் செய்த ஸ்பெய்ன் பிரதமர் பெட்ரோ சந்தேஸுக்கே, குறித்த கருத்தை ஜனாதிபதி பெர்ணான்டஸ் வெளிப்படுத்தியிருந்தார்.

பாகிஸ்தான்

போலியோ சொட்டு மருந்து அணிக்கு பாதுகாப்பளித்த

## பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக் கொலை



வட மேற்கு பாகிஸ்தானில், போலியோ தடுப்பு மருந்தேற்றல் பணியாளர்களைப் பாதுகாக்க அமர்த்தப்பட்டிருந்த இரண்டு பொலிஸ் அதிகாரிகளை, மோட்டார் சைக்கிள் ஒன்றில் வந்த துப்பாக்கிதாரிகள் சுட்டுக் கொன்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போலியோ நடவடிக்கையானது மேற்குலகின் சதித் திட்டமெனக் கூறுகின்ற பாகிஸ்தானிய போராளிகள், போலியோ அணிகள், அவர்களுக்கு பாதுகாப்பளிக்கும் பொலிஸார் மீது தாக்குதல்களை வழமையாக நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

அல் கொய்தாவின் முன்னாள் தலைவர் ஒஸாமா பின் லேடனைக் கண்டுபிடிக்க போலியோ தடுப்புமருந்தேற்றல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக வெளிப்படுத்தப்பட்டதை அடுத்து, இத்தாக்குதல்கள் அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிரியா

## டமஸ்கஸ்ஸை இலக்கு வைத்த இஸ்ரேல்

இஸ்ரேலியா விமானத் தாக்குதல்கள் ஊடாக மத்திய சிரியாவை செவ்வாய்க்கிழமை (08) இரவு, இலக்கு வைத்துள்ளன.

சிரியத் தலைநகர் டமஸ்கஸ்ஸில் குண்டு வெடிப்புகள் இடம்பெற்றதாக சிரியா அரச செய்தி முகவரகமான 'சனா' அறிக்கையிட்டுள்ளது

இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக வான் கட்டமைப்புகளை சிரியா இயக்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

லெபனானிய வான் பரப்பிலிருந்தே, இஸ்ரேலிய விமானங்கள் வந்ததாக 'சனா' தெரிவித்துள்ளது.

இந்நிலையில், அரசாங்க சார்புப் போராளிகள் 11 பேர், கொல்லப்பட்டுள்ளனர் என மனித உரிமைகளுக்கான சிரியக் கண்காணிப்பகம் கூறியுள்ளது.





உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகள்

# தென்கொரியாவிடம் தோற்ற இலங்கை

அடுத்தாண்டு நடைபெறவுள்ள சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் உலகக் கிண்ணத் தொடருக்கான தகுதிகாண் போட்டிகளில், தென்கொரியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற அவ்வணி உடனான போட்டியில், 0-5 என்ற கோல் கணக்கில் இலங்கை தோற்றது.

இலங்கை சார்பாக, கிம் ஷின்-வூக் இரண்டு கோல்களையும், லீ டொங்-ஜையொங்க், ஹுவாங் ஹீ-சான், ஜுங் சாங்-பின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலையும் பெற்றனர்.




## லேஸியோவின் முகாமையாளராக சரி

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான லேஸியோவின் முகாமையாளராக சரி நியமிக்கப்பட்டதை, அக்கழகம் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தியுள்ளது.

லேஸியோடன் இரண்டு ஆண்டுகள் ஒப்பந்தம் ஒன்றை சரி கைச்சாத்திட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இன்னொரு இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸின் முகாமையாளர் பதவியிலிருந்து கடந்தாண்டு ஓகஸ்ட் மாதம் நீக்கப்பட்ட பின்னர் எக்கழகமும் இல்லாமலே சரி காணப்பட்டிருந்தார்.

## பார்சிலோனாவுக்கு செல்கிறாரா ஸ்டேர்லிங்க்?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான றஹீம் ஸ்டேர்லிங்கை ஒப்பந்தம் செய்வது குறித்து ஸ்பானிய லா லிகா கழகமான றஹீம் ஸ்டேர்லிங்க் ஆராய்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

தமது முன்களவீரரான உஸ்மான் டெம்பிலி ஒப்பந்தத்தை நீடிக்காது விட்டால், அவருக்கான பிரதியீடாக 26 வயதான ஸ்டேர்லிங்கை பார்சிலோனா கருதுகிறது.

பார்சிலோனாவுடன் இன்னும் ஓராண்டு ஒப்பந்தத்தை 24 வயதான டெம்பிலி கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, சிற்றியுடன் இன்னும் இரண்டாண்டு ஒப்பந்தத்தை ஸ்டேர்லிங்க் கொண்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடர்

## வெளியேற்றப்பட்ட நடப்பு சம்பியன் ஸ்வியாடெக்



பிரெஞ்சுத் தலைநகர் பரிஸில் நடைபெற்றுவரும் பிரெஞ்சுப் பகிரங்க டென்னிஸ் தொடரிலிருந்து, நடப்புச் சம்பியனான இகா ஸ்வியாடெக் வெளியேற்றப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில், கிரேக்கத்தின் மரியா சக்கரியை எதிர்கொண்ட உலகின் ஒன்பதாம் நிலை வீராங்கனையான போலந்தின் ஸ்வியாடெக், 4-6, 4-6 என்ற நேர் செட்களில் தோல்வியடைந்து தொடரிலிருந்து வெளியேறினார்.

இந்நிலையில், மற்றொரு காலிறுதிப் போட்டியில், ஐக்கிய அமெரிக்காவின் கொகோ கௌஃப்பை எதிர்கொண்ட செக் குடியரசின் பார்பொரா கிரெஜ்சிகோவா, 7-6 (8-6), 6-3 என்ற நேர் செட்களில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இதேவேளை, தனது காலிறுதிப் போட்டியில், உலகின் 10ஆம் நிலை வீரரான, ஆர்ஜென்டீனாவின் டியகோ ஸ்வார்ட்மன்னை எதிர்கொண்ட நடப்புச் சம்பியனும் உலகின் மூன்றாம் நிலை வீரருமான ஸ்பெய்னின் ரஃபேல் நடால், 6-3, 4-6, 6-4, 6-0 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

இந்நிலையில், நேற்று அதிகாலை நடைபெற்ற தனது காலிறுதிப் போட்டியில், உலகிம் ஒன்பதாம் நிலை வீரரான இத்தாலியின் மட்டியோ பெரெட்டினியை எதிர்கொண்ட உலகின் முதல்நிலை வீரரான சேர்பியாவின் நொவக் ஜோக்கோவிச், 6-3, 6-2, 6-7 (5-7), 7-5 என்ற செட் கணக்கில் வென்று அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றார்.

பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசையில்

## மூன்றாமிடத்துக்கு முன்னேறிய சௌதி



சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு டிம் சௌதி முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் ஏழு விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே, ஆறாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி, மூன்றாமிடத்தை நியூசிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் சௌதி அடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை:

பற் கமின்ஸ், 2. இரவிச்சந்திரன் அஷ்வின், 3. டிம் சௌதி, 4. நீல் வக்னர், ஜொஷ் ஹேசில்வூட், 6. ஜேம்ஸ் அன்டர்சன், 7. ஸ்டுவேர்ட் ப்ரோட், 8. ஜேஸன் ஹோல்டர், 9. ககிஸோ றபாடா, 10. மிற்செல் ஸ்டார்க்.

முதல் 10 துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசை:

கேன் வில்லியம்ஸன், 2. ஸ்டீவ் ஸ்மித், 3. மர்னுஸ் லபுஷைன், 4. ஜோ றூட், 5. விராட் கோலி, 6. றிஷப் பண்ட், ரோஹித் ஷர்மா, 8. ஹென்றி நிக்கொல்ஸ், 9. டேவிட் வோணர், 10. பாபர் அஸாம்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 11 ஜூன் 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.